
# சடங்கு



## அமரர். சின்னப்பா தருமராசா

26.03.1935 — 23.12.2006

- நினைவிதழ் -

- என் கணவர்
- பிறப்பிலிருந்து இறப்புவரை சைவசமயக் கிரியைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சடங்கு

## நினைவிதழ்




தொகுப்பாசிரியர்

- திருமலை சுந்தா -





வெளியீடு:

அம்மா பதிப்பகம்

172, பிரதான வீதி,

திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சடங்கு

## தொகுப்புரை.........

அமரர் சின்னப்பா தருமராசா நினைவாக அவரது துணைவி திருமதி இராசம்மா தருமராசா அவர்களின் வேண்டுதலின் படி ஒரு நினைவிதழை தொகுக்க நான் முனைந்த போது 'சடங்கு' என் நினைவுக்கு வந்தது.

அமரரின் நினைவாக எல்லோரினாலும் பாதுகாத்து வைக்க வேண்டிய தொகுப்பாக இருக்கவேண்டும் என்ற நினைவோடு 'சடங்கு' உங்கள் கரங்களில் தவழுகின்றது.

பலரிடம் கேட்டு அறிந்தது - பத்திரிகைகளில் படித்தது - நூல்களை வாசித்து அறிந்தது. இப்படி அறிந்தவற்றை தொகுத்து 'சடங்கு' உருவாகி இருக்கின்றது.

மிகவும் சுருக்கமாக இத்தொகுப்பு உருவானதால் விரிவாக ஆய்வுக்கு உட்படுத்தி எழுதப்படவில்லை.


சேர்க்க வேண்டியது நீக்க வேண்டியது என உங்கள் அறிவுக்கு ஏதும் கருத்துக்கள் உருவானால் அதனை நீங்கள் எழுத்து மூலம் அறிவித்தால் இனி உருவாகும் 'சடங்கு' முழுமை பெறலாம்.

அமரரின் நினைவாக 'அம்மா பதிப்பகம்' இந்நினைவிதழை வெளியிடுவதில் அவரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**21.01.2007**

**- தொகுப்பாசியர் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர்

# திரு. சின்னப்பா தருமராசா

| மண் | விண் |
|---|---|
| 26.03.1935 | 23.12.2006 |

## திதிவெண்பா

'பார்புகழு வியவருடசேர் மார்கழி
சீராருநிதி திருதியையில் - நேராரும்
வல்லரிய சீராளன் தருமராசா கணபதியடி
எல்லவரும் கலங்க ஏகினான் காண்?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

## தேவாரம்

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைமுழ வதிர
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே

## திருவாசகம்

தொண்டர்காள் தூசிசெல்லீர் பக்தர்காள் சூழப்போகீர்
ஒண்திறள் யோகிகளே பேரணி யுந்தீர்கள்
திண்திறள் சித்தர்களே கடைக்கூழை செல்மின்கள்
அண்டர்நா டாள்வோம்யாம் அல்லற்படை வாராமே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை கரையிலா கருணைமா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு உள்ளம் குளிரஎன் கண்கள் குளிர்ந் தனவே


## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்சிற்றம்பலமே இடமாக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

உலகலாமுணர்ந்து ஓதுதற்கரியவன்
நிலவுலாவியன் நீர்மலிவேணியன்
அலகிற் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் கணவர்

**பேருக்கு பொருத்தமானவர் தான் என் கணவர்.**

யாழ்ப்பாணம் வடலியடைப்பில் சினனப்பா இராசம்மாவுக்கு அவருடைய குல தெய்வம் ஞான வயிரவர், கிருபையால் மூத்தபிள்யைாக வடலியடைப்புப் பிள்ளையாருடைய அருளால் நற்குணமாக வளர்ந்து பள்ளிப்படிப்பை தொடங்கி கல்வி கற்றுச் சிறந்து விளங்கினார்.

இரு தம்பிமார், புஸ்பராசா, துரைராசா. மைத்துனி பிள்ளைகள் உள்ளார்கள் சொந்தங்கள் என்றால் அவருக்கு சொர்க்கம். கொப்பங்கலட்டி தெல்லிப்பழையைச் சேர்ந்த என்னை 1971 ஆண்டு 6ம் மாதம் மணம் முடித்தார். 'அன்னம்' என்ற வார்த்தைக்கு எதிர் வார்த்தை கதைக்கமாட்டார். 1973ஆண்டு திரு. சுந்தரமூர்த்தி (உவர்மலை) உதவியுடன் திருமலை வந்தோம். ஞானகணேஸ்பூரணம் வளவில் குடியமர்ந்தோம். அவர்கள் எங்களுடன் அன்பாக பழகி, புது ஆட்கள் என்று பல உதவிகள் செய்தார்கள். பின் 1974 ஆண்டு கட்டிடபகுதியில் சிற்றூழியராக வேலை பார்த்தார். இவருடைய கண்ணியம் கடமைகளைப் பார்த்து களஞ்சியத்துக்கு காவலாளியாக நியமித்தார்கள். செவ்வாய், வெள்ளிகிழமைகளில் பத்திரகாளி கோயிலுக்கு இருவரும் போய் வருவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்களுடனும் சிறு பிள்ளைகளுடனும் பகிடிக்கதைகள் சொல்லிச் சிரிப்பார். பிள்ளைகளும் அன்ரி, மாமா என்று அன்பாக கதைப்பார்கள்.

1994ஆண்டு தைமாசம் ஓய்வூதியம் கிடைத்தது.

திருவிழாக் காலம் என்றால் கோயில் தான், கலியாணங்களும் பேசி, மணம் முடித்து வைப்பார்.

2000 ஆண்டு மார்கழி மாதம் திருவெம்பா கடைசி பூசை அன்று விழுந்தவர் எழுப்பி நடக்க முடியாது, போகாத வைத்தியர் இல்லை. நேர்த்தி வைக்காத கோயில்கள் இல்லை. வைத்தியரின் முடிவு பாரிசவாதம் ஒன்றும் செய்ய முடியாது என்பதே! 6 வருடம் நடை இல்லை. அவர் சுத்தமான உடை அணிபவர். சாகும்வரை சுத்தமாகவே இருந்தார். 2006-12- 23ம் திகதி சனிக்கிழமை அவருடைய உடலை விட்டு உயிர் பிரிந்தது. நானும் தனிமரமாகித் தவிக்கிறேன். 'அன்னம்' என்று யார் கூப்பிட்டாலும் எனது கணவர் நினைப்பு தான் வருகிறது எனது கண்ணீர் அவரின் ஆத்மா சாந்தியடைய இன்னும் வருகின்றது.

**அன்பு மனைவி**
**'அன்னம்'**
**(திருமதி இராசம்மா தருமராசா)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சடங்கு
# குழந்தைப் பருவம்

## நாமகரணம் ~ குழந்தை பிறந்து 31ம் நாள் பெயரிடல்

*''குழலினிது யாழினிது என்ப தம் மக்கள்*
*மழலைச் சொல் கேளாதவர்''* (குறள் - 66)



**பூ**மியிலே பிறக்கும் குழந்தைக்கு முதன் முதல் நடத்தப்படும் கிரியை ''நாமகரணம்'' எனப்படும். 31 நாட்கள் வரை குழந்தையை வெளியே கொண்டு செல்லுதல் கூடாது. குழந்தை பிறந்து 31ம் நாள் ஆசௌச கழிவு நடாத்தப்படும். இதனை 31ம் நாள் துடக்கு கழித்தல் என்றும் கூறுவார்கள். 31ம் நாள் வீட்டை சுத்தப்படுத்தி மஞ்சள் நீர் தெளிக்கவும். வாசலில் நிறைகுடம் குத்து விளக்குகள் வைக்கவும். குழந்தைக்கு அன்று முடியை இறக்கி நீராட்டி புத்தாடை அணிவர். வேதியரை அழைத்து அவர் முன்னிலையில் பின்வருவனவற்றை வைக்க வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவையான பொருட்கள்**

நிறைகுடம் (நீர் நிரம்பிய குடம்) முடியுடன் தேங்காய், மாவிலை5, தலைவாழையிலை அல்லது தாம்பாளம், நெல் அல்லது பச்சை அரிசி குத்துவிளக்கு, எண்ணெய், திரி, பூமாலை. விபூதி, சந்தனம், மஞ்சள், குங்குமம், பன்னீர்ச்செம்பு பிள்ளையாரை மஞ்சளில் பிடித்து வைக்கவும். கற்பூரம், கற்பூரத்தட்டு, ஊதுபத்தி, சாம்பிராணி, சாம்பிராணித்தட்டு, வெற்றிலை, பாக்கு, எலுமிச்சைபழம் இவற்றை ஒரு தட்டில் வைக்கவும். பழத்தட்டு, பூத்தட்டு, பால், கற்கண்டு, அறுகம்புல், மாவிலை.

வீட்டுப்பொருட்கள், உடைகள், உபயோகிக்கும் பொருட்கள் யாவும் கழுவிச் சுத்தம் செய்தபின், வீட்டிலுள்ளோர் குழந்தை உட்பட, யாவரும் தோய்ந்து சுத்தமாகிய பின் வேதியரை அழைத்து வந்து புண்ணியவாசனம் செய்வர். மந்திரம் ஓதிய நீரை அங்குள்ளோர் மீதும் மனை, ஏனைய பொருட்கள் என்பவற்றின் மீதும் தெளிப்பது வழக்கம்.துடக்குக் கழிந்தபின் குழந்தைக்குப் பெயர் சூட்டுதல் மரபாகும். வேதியர் குழந்தையின் நட்சத்திரத்தைக்கூறி பூஜை செய்த பின்பு தாய்மாமன் அல்லது பெரியவர் ஒருவர் மடியில் குழந்தையை இருத்தி, அதன் பெயரை வலது காதிலே மூன்று முறை ஓதிக் கற்கண்டுத் தண்ணீர் பருக்க வேண்டும். குழுமியிருப்போருக்கும் இனிப்புப் பாணம் வழங்கவேண்டும். இதன் பொருள் வம்சத்தில் தோன்றியுள்ள குழந்தை இறைவன் அருளால் பெயரும், வாழ்வும் பிரகாசிக்க வாழவேண்டும். எனப்பொருள்படும். அதன்பின்பு இனபந்தங்கள் குழந்தையின் பெயரைக் காதில் ஓதுவார்கள். பெற்றோர், உற்றோர் சுற்றம் சூழக்குழந்தையின் பெயரை மனம் நிறைந்த மகிழ்வுடன் எல்லோரும் அழைத்து மகிழ்வர். குழந்தை அன்றுதான் முதன்முதலாக அப்பெயரால் பல்லோராலும் அழைக்கப்பட்டு, ஆசீர்வாதம் பெற்று அப்பெயருக்கு உரியவராகிறார். இந்நிகழ்ச்சியையே குழந்தைக்குப் பெயர் சூட்டும் சடங்கு என்போம். ஐயருக்கு தானம், தட்சணை கொடுக்க வேண்டும்.

இந்நாளில் அரைஞாண் கயிறு கட்டுதல், பஞ்சாயுத சங்கிலி, பஞ்சலோகத்தினாலான காப்பு, காற்சங்கிலி போன்றவை அணியலாம்.

ஒரு தட்டில் ப்ச்சை அரிசி பரவி, வாழைப்பழம், மஞ்சள், குங்குமம், வெற்றிலை, பாக்கு, தேசிக்காய் வைத்து அதில் குழந்தைக்குரிய நகையை வைத்து தகப்பன் அல்லது தாய்மாமன் அக்குழந்தைக்கு அணிவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## திருஷ்டிப் பொட்டு (கறுத்தப்பொட்டு) செய்யும் முறை

100 கிராம் சவ்வரிசியைத் தாச்சியில் இட்டு சவ்வரிசி கறுப்பு நிறமாக வரும்வரை வறுக்கவும். பின் அதற்குள் தண்ணீர்விட்டு முல்லை, மல்லிகை, மலர்களையும், வாசனைத்திரவியங்களையும் இட்டு காய்ச்சவும். கூழ்போன்ற நிலையில் உள்ள இக்கரைசலை பின் ஆறவைத்து ஒரு துணியிலோ, வடியிலோ வடித்தெடுத்துக் கொள்ளவும். இக் கரிக்கூழைத் துப்பரவான செதுக்கிய சிரட்டையிலோ அல்லது கிண்ணத்திலோ ஊற்றி வெயிலில் நன்றாகக் காயவைக்கவும். காய்ந்த இப்பொட்டை தினமும் சிறிதளவு நீர் விட்டு உரைத்து பிள்ளைகளின் நெற்றியில் இடலாம். இப்படியாக கறுப்புப் பொட்டு இடுவதனால் திருஷ்டி கழியும் என்ற நம்பிக்கை இந்துக்களுக்கு உண்டு.

## 41ம் நாள்

குழந்தை பிறந்த துடக்கு கழித்தபின்பு 41ம் நாள் தாயையும் குழந்தையையும் கோயிலுக்குக் கூட்டிச்சென்று கோயிலில் குழந்தையின் நட்சத்திரத்தைச் சொல்லி அர்ச்சனை செய்து இறைவனை வழிபட வேண்டும். கோயிலுக்குச் செல்லும் போது அர்ச்சனைப் பொருட்களைத் தட்டில் வைத்துக் கொண்டு செல்லவும். (வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், பூக்கள், கற்பூரம், ஊதுபத்தி), குழந்தையை சுவாமி சந்நிதானத்தின் (கற்பக்கிரகம்) முன்னிலையில் வளர்த்தி எடுப்பது வழக்கம்.

## காதுகுத்தல் (கர்ணவேதனம்)




குழந்தை பிறந்து 6ம், 7ம், 8ம், 10ம் மாதங்களிலம் ''காதுகுத்தல்'' வைபவம் நடாத்தப்படும். இதற்குப் பூஜை, கிரியை எனச் செய்ய வேண்டியதில்லை. பிள்ளையார் பிடித்து வைத்த நிறைகுடம் வைத்து வணங்கிச் செய்தல் வேண்டும். இது குழந்தைகளுக்கு ஏற்படும் அனுட்டதோஷ நிவர்த்திக்காகவும். தமிழர் கலாச்சாரத்திற்காகவும், அழகுக்காகவும், குத்தப்படுகிறது. பொற்கொல்லர் ஒருவரை வீட்டுக்கு அழைத்து வந்து காதுகுத்தித் தோடு போடுவார்கள். (தைப்பூசத்தில் காதுகுத்தல் செய்வது சிறப்பாகும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோறூட்டல் (அன்னப்பிராசனம்)



ஆண் குழந்தைக்கு 6ம், 8ம், 10ம், 12ம் ஆகிய இரட்டை விழுந்த மாதங்களிலும் பெண் குழந்தைக்கு 5ம், 7ம், 9ம், 11ம் ஆகிய ஒற்றை விழுந்த மாதங்களிலும் சுபமுகூர்த்தம் பார்த்து சர்க்கரை அரிசி, கற்கண்டு, நெய் ஆகியவை கொண்டு உப்பு நீக்கிய அமுது பொங்கி, அப்பொங்கலைப் படைத்து வைத்து திருவிளக்கேற்றி பிள்ளையார் பூஜை செய்து அதன் பின் இது குழந்தையின் முதல் போசனமாதலால் தங்க மோதிரத்தால் அவ்வமுதைத் தொட்டு தாய்மாமன் மூன்று தடவை எடுத்து ஊட்டி மற்றோரும் எடுத்து ஊட்டி நீண்ட ஆயுளுடனும் ஆரோக்கியத்துடனும் வாழக் குழந்தையை ஆசீர்வதிப்பர்.

## முதல் பல் தோன்றுதல் - பல் முளைத்தல்

குழந்தைக்கு பல் முளைக்க ஆரம்பிக்கும் பொழுது பல்லுக் கொழுக்கட்டை அவிக்க வேண்டும். மஞ்சளில் பிள்ளையார் பிடித்து விளக்கு ஏற்றி வெள்ளைத்துணி விரித்து இறைவனை வழிப்பட்டு குழந்தையின் தலைமீது வெள்ளைத்துணி போட்டு ஒன்பது கொழுக்கட்டைகளை தாய்மாமன், மாமி குழந்தையின் தலையில் கொட்டி குழந்தைக்கு சிறிது ஊட்டி, உற்றார் உறவினர்களுக்கும் கொடுத்து மகிழ வேண்டும். குழந்தைக்கு ஆரோக்கியமான பற்கள் முளைக்க வேண்டுமென்பதற்கும் இறைவனிடம் ஆசி பெறவும் இவ்வழிபாடு கொண்டாட்டமாக நிகழ்த்தப்படுகின்றது. குழந்தை சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ உறவினர்கள் ஆசீர்வதிப்பர்.

### கொழுக்கட்டை

அரிசிமா - ½ சுண்டு
அவித்த கோதுமைமா - 3 மேசைக்கரண்டி
உடைத்த பயறு - 100g (பயறு வறுக்கவும்)
சர்க்கரை - 100g
தேங்காய் - ½ மூடி (வெள்ளைப்பூ)
ஏலக்காய் - சிறிதளவு வறுத்து பொடி செய்ய வேண்டும்.
உப்பு - சிறிதளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுத்த பயிற்றம் பருப்பை அவித்து நீர் வடியவிட்டு ஆறவிடவும். ஆறிய பயற்றை சர்க்கரை, தேங்காய்ப்பூ, ஏலக்காய் பொடியாவும் போட்டு ஒன்றாகச் சேர்க்கவும். அதன்பின்பு அரிசி மாவையும், கோதுமை மாவையும் ஒன்றாகச் செர்த்து தேவையான உப்புப் போட்டு கொதிநீர் விட்டு இடியப்பம் குழைக்கும் பதத்தில் குழைக்கவும். பின்பு சிறு உருண்டைகள் பிடித்து அவற்றைக் கிண்ணம் போற் செய்து பயற்றுத் துவையலை அவற்றுள் வைத்து அரைவட்ட வடிவமாக்கி பல்லுப்போல் விளிம்பைச் செய்து சிறுதேங்காய்ச் சீவலுடன் கொழுக்கட்டை அவிக்கவும்.

## கல்வி ஆரம்பம் (ஏடு தொடக்குதல்)

பண்டைக்காலத்தில் கல்வியை ஏட்டிலிருந்தே பெற்றுக் கொண்டனர். அதன் காரணமாகவே இன்றும் வாழ்க்கையில் முதன் முதலாகக் கல்வியை ஆரம்பிக்கும் போது 'ஏடுதொடக்கல்' என்று கூறப்படுவது வழக்கமாகி விட்டது.



இது மூன்று அல்லது ஐந்தாம் வயதில் நடைபெறலாம். சுபவேளையில் பிள்ளையார் பூஜை செய்து வித்தியாரம்பம் செய்தல் வேண்டும். குழந்தைக்கு முதன் முதலில் கல்வி கற்க ஆரம்பத்தில் பெரும் பாலும் எம்மவர்கள் விஜயதசமி எனப்படும் நவராத்திரி விழாவின் பூர்த்தியன்றே மேற் கொள்வார்கள். தைப்பூசத்தன்றும், தை முதல் ஆனி வரையிலான காலப்பகுதியில் ஜாதகரின் நட்சத்திரத்திற்கு ஏற்றதாக அமைந்த சுபநாளிலும் செய்யலாம். தந்தை அல்லது ஆலயகுரு அல்லது ஆசிரியர் யாரேனும் ஒருவர் இந்த வித்தியாரம்பத்தை மேற்கொள்வார்கள். கல்வியில் மேன்மையடையவே, முதற்கல்வியை சுபநாளில் சுபநேரத்தில் செய்வது எமது மரபு. ஏடு தொடக்குவதை கோயிலிலும் செய்யலாம். (வசதியில்லாதோர்) ஒரு தட்டில் பூசைக்குரிய பொருட்களுடன் (வெற்றிலை, பாக்கு, பழம், முடித்தேங்காய், கற்பூரம், ஊதுபத்தி, பூ, தட்சணை) கோயிலுக்குச் செல்ல வேண்டும். கோயிலுக்குச் செல்ல இயலாதவர்கள் வீட்டில் பிள்ளையார் படத்தையோ, மஞ்சள் அல்லது சாணத்தில் பிள்ளையார் பிடித்து வைத்தோ நிறைகுடம் வைத்து விளக்கு ஏற்றி இறைவனை வணங்கி ஒரு தட்டில் அரிசியை பரப்பி அதில் குழந்தையின் கையை பிடித்து முதல் எழுத்தாகிய 'அ' அகரத்தை அதில் எழுதித் தொடக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூப்புனித நீராட்டு விழா



ஒரு பெண்குழந்தை பிறந்து வளர்ந்து பருவமடைந்து தாய்மைக்குத் தகுதி உடையவளாக மாறும் நாள் பூப்புடைதல் என்று சொல்லப்படும். பெரும்பாலும் 9 வயது முதல் 12 வயதிற்குள் பூப்படைதல் பெண் குழந்தைகளுக்கு ஏற்பட்ட பின்னரே பரி பூரணமான பெண்ணாக மதிக்கப் படுகிறாள்.

## நீராட்டல்

பெண் பூப்படைந்தவுடன் முக்காலத்தில் கிணற்றடியில் காய்ந்த இலைகளின் மேல் இருத்தி தாய் மாமன் தேங்காய் உடைக்க,மாமி தண்ணீர் ஊற்றி நீராட்டுவார்கள். கிணற்றடி பொது இடம், பெண்ணிலிருந்து வெளிப்படும் தீட்டு பிறர் கண்ணில்படாது குப்பைக்குள் மறைந்துவிடும் என்பதால் காய்ந்த இலைகளின் மேல் இருத்தி நீராட்டுவார்கள். இக்காலகட்டத்தில் பெண்ணை குளியலறையில் மாமியார் நீராட்டலாம். பின்பு பெண்ணுக்கு புதிய ஆடை அணிவித்து தாய்மாமனிடம் ஆசீர்வாதம் பெற்றபின் ஒரு தனியறையில் பெண்ணை விட வேண்டும். அவ்வறையில் வேப்பிலையும் காம்புச்சத்தகம் முதலானவற்றை இருப்பிடத்தின் மேலே செருகிவிடுவர். பெண் பூப்படைந்தபோது அணிந்திருந்த ஆடையினை குடும்பச் சலவைத் தொழிலாளிக்குக் கொடுப்பதே மரபாக உள்ளது. தீட்டுக் கழியும்வரை மாற்றுடுப்புகளை வழங்க வேண்டிய பொறுப்பும் அவரையே சார்ந்துள்ளது. அழுக்கடைந்த சேலையை கட்டாடியார் எடுத்துச் சென்று ஒரு பெண் பூப்படைந்து விட்டாள் என்பதனை கட்டாடியார் உறுதிப்படுத்துவார். அவ்வீட்டில் உள்ள அனைவருக்கும் முப்பத் தொன்று நாட்கள் துடக்காகையால் அதை நிவர்த்தி செய்வதற்கு அந்தணரை அழைத்து புண்ணியவாசம் செய்வர் முன்பு கிராமப்புறங்களில் பூப்பெய்தி 4ம் நாள் பசும் பால் வைத்து நீராட்டித் துடக்கைப் போக்குவார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உணவு முறை :-**

முதல் மூன்று நாட்களும் பச்சையரிசிச் சாதமும், கத்தரிக்காய் பாற்கறியும் கொடுத்தல் வேண்டும். மூன்று நாட்களின் பின் அதிகாலை ஒரு பச்சை முட்டை குடிக்கக் கொடுக்கும் பொழுது அதன் அளவு நல்லெண்ணெயும் முட்டைக்கோதுக்குள் விட்டு குடிக்கக் கொடுக்க வேண்டும். பின்பு காலை உழுத்தங்களி, மதியம் சோறு கறி, கத்தரிக்காய் (பொ)ரியல் (முட்டைப் பொரியல்) கொடுக்கலாம். பால் விடாது காலை, மாலை கோப்பி கொடுக்கலாம். இரவு இடியப்பம் கொடுக்கலாம். இக்காலத்தில் இலகுவாக ஜீரணிக்கக்கூடிய போசாக்கான சத்துள்ள உணவுகளைக் கொடுக்க வேண்டும். முக்கியமாக அனைத்து உணவுகளிலும் உழுந்தும் நல்லெண்ணெயும் மிகுதியாகச் சேர்க்க வேண்டும்.

அத்துடன் காலையில் (வேப்பிலை 10, மிளகு 3, விரற்பிடி சின்னசீரகம், 2 உள்ளிப் பல், சிறுதுண்டு மஞ்சளும், இஞ்சியும்), இவற்றை அரைத்துக் குளிசைகளாக்கி 3 நாட்களுக்குக் விழுங்கக் கொடுப்பது உடலுக்கு நல்லது.

## சாமர்த்தியச் சடங்கு



சடங்கு செய்வதற்கு சுபநாளில் ஒன்றை தெரிவு செய்து அன்று பருவமடைந்த பெண்ணின் இரண்டு கைகளிலும் ஒவ்வொரு வெற்றிலைக்குள் பாக்கும் சில்லறைக் காசும் வைத்துச் சுருட்டிக் கொடுத்து, தலையில் வெள்ளைத் துணியால் முகத்திரை இட்டு (அபசகுணங்களைப் பார்க்காமல் இருப்பதற்கு) மாமியார் பால் அறுகு வைக்கும் இடத்திற்கு அழைத்து வந்து, கிழக்கு அல்லது வடக்கு நோக்கி பார்க்கக்கூடியதாக பாயின் மேலோ அல்லது ஒரு பலகைக் குற்றியின் மேலோ ஒரு வெள்ளைத்துண்டை இட்டு பருவமடைந்த பெண்ணை உட்கார வைக்க வேண்டும். அவளின் முன் நிறைகுடமும், குத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்குகளும் ஒரு பாத்திரத்தில் பால், அறுகம் புல், சில்லறைக் காசு என்பனவும், வேறு ஒரு தட்டில் பழம், பாக்கு வெற்றிலையும் ஒரு தேங்காயுடன் உடைப்பதற்கு அரிவாலும், பாத்திரமும் வைக்க வேண்டும். இச்சடங்கில் தாய்மாமன், மாமிக்குத்தான் முக்கிய இடம் அளிக்கப்படும். பெண்ணை நிறைகுடம் விளக்கில் பார்க்கும்படி பெண்ணுக்கு கூறி முகத்திரையை விலக்கி விட்டு அதன் பின் கற்பூரம் ஏற்றி பிள்ளையாரைத் துதித்து எடுத்தகாரியம் இனிதே நடைபெற வேண்டும் என்று நினைத்து வணங்க வேண்டும். தாய்மாமன் தேங்காய் உடைப்பார். பின் பால், அறுகு இருக்கும் தட்டில் சில்லறைக்காசு போட்டு மாமியார் இருகைகளினாலும் எடுத்து பெண்ணை ஆசீர்வதித்து தலையிலே வைப்பார் அதைத் தொடர்ந்து 5 பேர் அல்லது 7 பேர் எண் ஒற்றை எண்ணிக்கையானவர்கள் பாலறுகு வைப்பர். பாலறுகு வைத்து முடிந்ததும் பெண்ணை நீராட்டும் இடத்திற்கு அழைத்துச் சென்று அங்கும் கிழக்கு அல்லது வடக்கு முகமாகப் பெண்ணை இருத்தி முதலில் தாய்மாமன் தலையிலே தண்ணீரை ஊற்றுவார். அதனைத் தொடர்ந்து ஏனையவர்களும் ஊற்றுவர். பெண்ணுக்கு மஞ்சள் பூசி நன்கு நீராட்டி திரும்பவும் தலையைத் துணிகொண்டு மூடி அழைத்துவந்து சுடர்விட்டு பிரகாசிக்கும் குத்து விளக்கில் தரிசிக்க விடுவர். பின்பு பெண்ணை அலங்காரம் செய்து தாய்மாமன் பெண்ணின் கையில் கும்பம் (நீர் நிரம்பிய) செம்பு, தேங்காய், வேப்பிலைக் கொத்து, மாவிலை) கொடுப்பார். கன்னிப் பெண்கள் குத்துவிளக்குகளுடன் முன்னால் செல்ல சுமங்கலிப் பெண்கள் ஆரத்திப் பொருட்களுடன் பெண்ணை அழைத்துக் கொண்டு மணவறை நோக்கிச் செல்வர். அங்கு ஆரத்தி தட்டங்களை வரிசையாக வைப்பர்.

பின்னர் சுமங்கலிப் பெண்கள் இருவர் எதிரெதிராக நின்று கொண்டு ஒவ்வொரு தட்டங்களையும் ஒன்றன் பின் ஒன்றாக மூன்று முறை வலது தோளால் உயர்த்தி ஆரத்தி எடுத்து பின் சிரசை மூன்று முறை சுற்றி அதைப் பின்னுக்கு கொடுத்து கண்ணூறு கழிப்பார்கள். பின்பு கடைசியாக வேப்பமிலை, பால் ரொட்டியால் ஆரத்தி எடுத்துப் பெண்ணை வேப்பிலையால் சுற்றித் தடவி பால் ரொட்டியை உடைத்து நாலுபக்கமும் எறிந்து வேப்பிலையால் தலையைச் சுற்றிப் பெண்ணை வாயில் மென்று துப்பச் செய்த பின்னர், வாழைப்பழ ஆரத்தி எடுப்பர். (ஆரத்திக்குரிய தட்டங்களின் ஒழுங்கு இடத்துக்கிடம் வேறுபடலாம். அனால் எப்பவும் நிறைநாழி முதலாவதாகவும் வேப்பிலை வெள்ரொட்டித்தட்டம் இறுதியாகவும் செய்யவேண்டும். அதன் பின் வாழைப்பழம் ஆரத்தி எடுத்து நிறைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தல் வேண்டும். (பொதுவாகப் பெண்ணின் தாயார் ஆராத்தி எடுப்பதில்லை) பெற்றோர் ஆண்டாள் மாலையை பெண்ணின்கழுத்தில் இட (ஆண்டாள் மாலை அணிவது பெண்ணை பாவையாகக் கருதுவதால்) பெண்ணின் முன் இருக்கும் நிறைகுடத்தைத் தாய்மாமனும், குத்துவிளக்கை மாமியாரும் எடுத்துக்கொண்டு அதனுடன் பெண்ணையும் அழைத்துக் கொண்டு பூஜைஅறையினுள் சென்று வைப்பர், தாய்மாமன் பெண்ணின் கையிலிருக்கும் செம்பை வாங்கி பூஜை அறையில் வைப்பார் (இம்முறை வீட்டில் செய்வோருக்குப் பொருந்தும்) பூஜை அறையில் தூப தீபம் காட்டி வழிபட்டு பெண் பெற்றோரினதும், மாமன் மாமியினதும் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெறுவாள். பின்பு சடங்கில் பங்குபற்றிய உறவினர்கள் பெண்ணை வாழ்த்தித் தம்மால் இயன்றவற்றை பரிசளிப்பார். அதன் பின் வந்தவர்களை மதியபோசன விருந்தளித்து உபசரிப்பர்.

## ஆரத்தி எடுக்கும் முறை :

ருது சாந்தியின் போது எடுக்கும் ஆரத்தி 3 முறை மேலும் கீழுமாக சுற்றிப் பின் பெண்ணின் தலைக்கு மேல் 3 முறை சுற்றிப் பின்னால் கொடுக்க வேண்டும். (நிறைநாழியும், பன்னீர்த் தட்டமும் முன்னுக்கு வைக்க வேண்டும். உணவுத் தட்டங்களைத் தலைக்கு மேல் சுற்றிப் பின்னால் கொடுக்க வேண்டும்.) பூத்தட்டத்தால் ஆரத்தி எடுத்தபின் பூக்களைப் பெண்மேல் தூவி விடுதல் வேண்டும். பின் இந்த உணவுப் பண்டங்களை எல்லாம் கட்டிக், கட்டாடியிடம் கொடுத்து விட வேண்டும். அல்லது ஆற்றிலோ, கடலிலோ சேர்த்து விடலாம். இன்றைய நிலையில் ஏழைகளுக்கு கொடுத்து விடலாம்.

பாற்சாதம் : பச்சை அரிசிக்குள் தேங்காய்ப் பாலும், நீரும் சிறிது உப்பும் போட்டு சாதமாக அவித்து 3 தளிசுகளாகத் தட்டில் வைக்கவும்.

பிட்டு : வழமை போல் வறுத்த உழுத்தமா அரிசிமா கலந்து செய்த பிட்டை நீற்றுப்பெட்டியில் மும்முறை அவித்து தட்டத்தில் வைக்கவும்.

களி : வறுத்த அரிசிமா 1 சுண்டு, வறுத்த உழுத்தமா 1/2 சுண்டு, தேங்காய்ப்பால் 3சுண்டு,பனங்கட்டி 3/4 சுண்டு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உப்பு விரற்பிடியளவு, தேங்காய்ப் பாலைக் காய்ச்சி (உழுத்தமா, அரிசிமா, உப்பு, தூளாக்கிய பனங்கட்டி) எல்லாவற்றையும் கலந்து பாலின் மேல் தூவி கட்டிபடாமல் கிளறி எடுக்கவும் 3 தளிசுகளாகத் தட்டத்தில் வைக்கவும்.

### *வெள்ரொட்டி (பால்ரொட்டி)*

1 சுண்டு பச்சை அரிசியை கழுவி ஊற வைத்து இடித்து 1/4 சுண்டு கப்பிமா எடுக்கவும். மிகுதியை மாவாக்கவும் இரண்டையும் கலந்து 1/2 தேக்கரண்டி உப்பும் சேர்க்கவும். ஒரு தேங்காய் துருவி முதல் பால் எடுத்துக் காய்ச்சி மாவில் ஊற்றி இறுக்கமாக கையில் ஒட்டாத பதத்திற்குக் குழைக்கவும். 1/2 மணித்தியாலயம் விட்டு ஒரு வாழையிலையில் எண்ணெய் தடவி மாவை சிறு சிறு உருண்டைகளாக்கி தட்டி எண்ணெயில் பொரிக்கவும் இது பூரி போல் பொங்கி வரவேண்டும்.

## ஆரத்திப் பொருட்கள்

நிறை நாழி (நிறை நாழி கொத்தில் நெல்லை நிரப்பி அதில் காம்பு சத்தகத்தை நிற்க வைத்து நுனிக்காம்பில் ஒரு வெற்றிலையைச் செருகிவைக்க வேண்டும்)

**பிட்டு, களி, பால்சாதம், சோறுகறி**
**தேங்காய்த் தட்டம் (முடியுடன் கூடிய 3 தேங்காய்களை மஞ்சள் நீர் கொண்டு கழுவித் தட்டில் வைக்கவேண்டும்)**

**பழங்கள்,**
**பலகாரம்,**
**பன்னீர்த் தட்டம்,**
**வெற்றிலை பாக்கு எலுமிச்சை,**
**பூத்தட்டு,**
**வெள்ரொட்டி,**
**வேப்பிலை,**
**ஆரத்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணச் சடங்கு

'திரு' என்பது தெய்வத்தன்மை எனவும், மணம் என்பது இணைதல் எனவும் பொருள்பட்டு, மேன்மையான தெய்வீகம் வாய்ந்த இணைதல் எனப்படுகின்றது. அதாவது இரு இதயங்கள் இணைவது எனக் கூறலாம்.

தமிழரின் இந்துத் திருமணம் ஆகம மரபுச் சடங்குகளுடன் சில சிறப்பு அம்சங்களையும் தழுவி நடைபெறுகின்றன. இச்சடங்குகளை நன்கு படித்த குருக்கள் சமய முறைப்படி அக்கினி பூர்வமாக இறைவனின் ஆசியுடன் நடத்தி வைக்கிறார். திருமண நிகழ்வில் முக்கியமான நிகழ்ச்சி சுபவேளையில் தாலி கட்டுதலாகும். இதனை ''மாங்கல்யதாரணம்'' எனக் கூறுவர். தாலி கட்டியதும் அப்பெண் ''சுமங்கலி'' அதாவது திருமணமானவள் என்ற அந்தஸ்த்தைப் பெறுகிறாள்

இரு வீட்டாரும் முதலில் சாதகப் பொருத்தத்தை ஆராய்வார். தமிழ்நாட்டில், பெண் பார்க்கும் படலம் போன்று நம் நாட்டில் பெண்ணை மணமகள் பொது இடங்களில் பார்ப்பது வழக்கமாகவுள்ளது. பின் நிச்சயதார்த்தத்தை உறுதிசெய்யப் பெண் வீட்டார் தாம்பூலம், பலகாரம், பழங்களோடும். உறவினரோடும் மணமகன் வீட்டிற்கு நல்ல நாட் பார்த்துச் செல்வர். இதன்பின் இரு வீட்டாரும் திருமணநாளைச் சோதிடரிடம் கேட்டு நிச்சயிப்பர். அத்தோடு பொன்னுருக்கலுக்கும் ஒரு நாளை நிச்சயிப்பர்.

## பொன்னுருக்கல்

திருமண நாளுக்கு முன்பு ஒரு சுபநாளில் மணமகன் இல்லத்தில் அல்லது ஆசாரி வீட்டில் பொன்னுருக்கல் நடைபெறும் இதில் மணப்பெண்ணைத் தவிர பெண்ணின் உறவினர்கள் நண்பர்கள் கலந்து கொள்வர். பெண் வீட்டார் ஓர் இனிப்புப் பண்டம் (கொழுக்கட்டை) கொண்டு செல்லுதல் ஓர் சம்பிரதாயம்.

மணமகன் வீட்டு வாசலில் முறைப்படி நிறைகுடம், குத்துவிளக்கு, பன்னீர்த்தட்டு, குங்குமம், சந்தனமும் வைத்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னுருக்கும் இடத்தில் ஒரு நிறைகுடம், குத்துவிளக்குகள் 2, தேங்காய் 2, மாவிலை, வெற்றிலை பாக்கு, வாழைப்பழம், மஞ்சள் கட்டை (துண்டு), தேசிக்காய், அறுகம்புல், பூக்கள், ஒரு சட்டியில் தண்ணீர், தேங்காய் உடைக்க கத்தி, விபூதி குங்குமம், சந்தனம் தேசிக்காய், மஞ்சளில் பிள்ளையார், சாம்பிராணியும் தட்டும், கற்பூரத் தட்டும், கற்பூரம் முதலிய முக்கியமாகத் தேவைப்படும் பொருட்களாகும்.

திருமாங்கல்யத்திற்குரிய தங்கநாணயத்தை (பவுணை) ஆலயத்தில் (இறைவனிடத்தில்) வைத்து பூசை செய்து ஒரு தட்டத்தில் வெற்றிலை, பாக்கு மஞ்சள், குங்குமம், பூ, பழத்துடன் நாணயத்தையும் வைத்துத் கொண்டு வந்து பூஜையறையில் வைக்க வேண்டும். பொன்னுருக்கும் நாளன்று அதை மணமகனின் பெற்றோர் அல்லது பெரியோர் எடுத்து மணமகனிடம் கொடுக்க அவர் அதை ஆசாரியாரிடம் கொடுத்து உருக்க வேண்டும். ஆசாரியார் கும்பம் வைத்து விளக்கேற்றி தூபதீபம் காட்டி வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் முதலியவை வைத்து தேங்காய் உடைத்துப் பூசை செய்து பொன்னை உருக்குவார். உருக்கியபின் தாய்மாமன் தேங்காய் உடைத்து அந்த இளநீரை உருக்கிய தணலில் ஊற்றி தீயைத் தணிப்பார். பின் ஒரு தட்டில் வெற்றிலை பாக்கு, பழம், பூ மஞ்சள், குங்குமம், தேசிக்காய் வைத்து வெற்றிலைமேல் உருக்கிய தங்கத்தையும் வைத்து மணமனிடம் ஆசாரியர் கொடுப்பார். அதை மணமகன் வந்துள்ள சபையோருக்குக் காண்பித்து, அதன்பின் ஆசாரியாருக்கு அரிசி காய்கறியுடன் தட்சணை அளித்து உருக்கிய தங்கத்தைத் திருமாங்கல்யம் செய்ய ஒப்படைக்க வேண்டும். பின்னர் விருந்துபசாரத்தில் அனைவரும் கலந்து கொள்வர். மணமகன். வீட்டிலிருந்து தோழி விருந்தில் ஒரு பகுதியை மணமகளின் வீட்டிற்கு சென்று மணமகளிற்கு கொடுப்பார். இதே நாளில் இரு வீடுகளிலும் திருமணத்திற்குரிய பலகாரங்களை செய்யத் தொடங்குவார்கள். முதன் முதலாக இனிப்புப் பலகாரம் செய்ய வேண்டும். என்பதால் சீனி அரியதரம் செய்யலாம். அதற்குரிய மாவை குழைத்து வைத்தால் கன்னிக்கால் ஊன்றியபின் பலகாரம் சுடலாம். (இந்த நாளிலிருந்து திருமணநாள் வரை மணமக்கள் ஒருவரை ஒருவர் பார்க்கக் கூடாததென்பது பழையகாலச் சம்பிரதாயம்)

## கன்னிக் கால் ஊன்றல்

இதே நாள் பெண் வீட்டிலும் மணமகன் வீட்டிலும் தனித்தனியே அவர்களின் வளவில் ஈசான (வடகிழக்கு) மூலையில் முகூர்த்தக்கால் அல்லது கன்னிக்கால் ஊன்ற வேண்டும். அதற்கு இப்போது கலியாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்முருங்கை மரத்தில் ஒரு தடியை வெட்டி அதன்மேல் நுனியில் 5 மாவிலைகளை மஞ்சள் பூசிய கயிறால் கட்டி, இடையில் ஒரு மஞ்சள் பூசிய வெள்ளைத் துணியில் ஒரு செப்புக்காசு முடிந்து கட்டிவிட வேண்டும். பெரியவர் ஒருவர் அத்தடியை நிலத்தில் ஊன்றியதும், அதற்கு தேங்காய் உடைத்து சாம்பிராணி, கற்பூரம் காட்ட வேண்டும். அதனடியில் நவதானியத்தோடு பவளம் அல்லது நவமணிகளும் இட்டு நீர், பால் ஊற்றி (3 சுமங்கலிப் பெண்கள்) மரத்திற்கு திருநீறு, சந்தனம், குங்குமம் சாத்த வேண்டும். இது நன்கு வளர வேண்டுமென்று நினைத்து கும்பத்தண்ணீரை ஊற்றலாம்.

மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வைத்து வெற்றிலை, பாக்கு, பழம் வைத்து தேங்காய் உடைத்துத் தூபதீபம் காட்டி பந்தற்காலை ஊன்றுவார்கள் பந்தல் காலைத் தொடர்ந்து பந்தல் அமைக்கும் வேலை தொடரும் மணமகள் வீட்டில் ஊன்றிய பின் மணமகன் வீட்டுக்கும் சென்று இதேபோற் செய்ய வேண்டும்.

முகூர்த்தக்கால் ஊன்றிய பின் இரு வீட்டாரும் திருமணச் சடங்குகள் முற்றாக முடிவடையும் வரை எந்தவிதமான துக்க நிகழ்ச்சிகளிலும் பங்குகொள்ளக் கூடாது என்பர். (பந்தற்கால் ஊன்றுபவருக்கு தட்சணை கொடுக்க வேண்டும்.)

## முளைப்பாலிகை போடல்

பெண் வீட்டில் மூன்று அல்லது ஐந்து மண்சட்டிகளில் மண்பரப்பி நீர் ஊற்றவும். பாலில் ஊறவைத்த நவதானியங்களை 3 அல்லது 5 சுமங்கலிப் பெண்கள் அச்சட்டிகளில் தூவி நீரும் பாலும் தெளிக்க வேண்டும். (3 முறை) இவற்றை சாமி அறைக்குள் வைத்து திருமணத்தன்று மணவறைக்குக் கொண்டு போக வேண்டும். அநேகமாக பொன்னுருக்கலன்று செய்வார்கள். (இதை 3 நாட்களுக்கு முன்னாவது செய்தால் திருமணத்தன்று நவதானியம் வளர்ந்து இருக்கும்.

முளைப்பாலிகை இடுவதன் நோக்கம் திருமணம் செய்து கொள்ளும் மணமக்களும் அவர்கள் குடும்பமும் முளைவிட்டு பல்கிப்பெருகி வாழ வேண்டும் என்பதே. ''விரித்த பாலிகை முளைக்கும் நிரையும் " என்கிறது சிலப்பதிகாரம். இந்தப் பாலிகை யானது திருமணத்திற்குப் பின் நதியிலே சேர்த்து விடலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவதானியம் - நெல், கோதுமை, பயறு, துவரை, மொச்சை, எள்ளு, கொள்ளு, உழுந்து, கடலை என்பனவாம்.

## பந்தல் அமைத்தல்

முகடுடைய பந்தல் அமைக்கும் பழக்கம் அக்காலத்தில் நடைமுறையில் இருந்து வந்துள்ளது. பந்தலின் உட்பகுதியில் மேலுக்கு துணிகளைக் கட்டுவார்கள். அழகுக்காகவும் திருமணச் சடங்கு நடக்கும் பொழுது பந்தலின் மேலிருந்து தூசி அழுக்குப் பொருட்கள், பல்லி போன்றவை விழுந்து விடாமல இருப்பதற்காவும் இந்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. பந்தலை கமுகு, வாழை, தென்னை ஓலைகளால் அலங்கரிப்பர்.



வாழைமரம் ஒருமுறைதான் குலைபோடும் அதுபோல் எமது வாழ்விலும் திருமணம் ஒருமுறைதான் என்பதை உணர்த்துகிறது. பாக்குக் கொத்துக் கொத்தாகக் காய்ப்பதால் இது தம்பதிகள் ஒற்றுமையாக வாழவேண்டும். என்பதை வலியுறுத்துகிறது. வாழ்யும் தென்னையும் 'கற்பகத்தரு' இவை அழியாப்பயிர்களாகும். தென்னை நூறாண்டு வாழக் கூடியது. வாழை 'வாழையடி வாழையாக' வளர்வது தேங்காயும் வாழைப்பழமும் இறைவழிபாட்டில் முக்கியமாகிறது. தம்பதிகள் நிலைத்து நின்று அனைவருக்கும் பயன்படக் கூடியவாறு வாழ வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்துகின்றது.

திருமணம் வசதிக்கேற்ப பெண்வீட்டிலோ, கோயிலிலோ அல்லது வேறு மண்டபத்திலோ வைக்கலாம். அப்படி வேறு மண்டபத்தில் வைப்பதானால் இருவரது வீட்டு வாசல்களிலும் மண்டப வாயில்களிலும் மாவிலை, தோரணம், வாழைமரங்களால் அலங்கரிக்க வேண்டும்.

வாழைமரம் கட்டுவதன் நோக்கம் வாழையடி வாழையாக வாழைமரம் தழைத்து வளருவது போல, நமது சந்ததியும் பெருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்பதாகும். மாவிலை தோரணங்கள் மங்கள முறையாகக் கட்ட வேண்டும். வாசலில் நிறைகுடம் வைக்க வேண்டும். வசதிக்கேற்ப வீடுகளையும் மண்டபத்தையும் அலங்கரிக்கலாம். மண்டபத்தில் நன்கு அலங்கரிக்கப்பட்டே மணவறை கிழக்கு நோக்கி அமைக்கப்படும். மணவறையின் முன்பு சுவாமி அம்பாள் கும்பங்கள், சந்திரகும்பம், விநாயக பூஜை, பஞ்ச கௌவ்விய பூசைக்கென ஒரு கும்பம், அக்கினி கிரியைக்குரிய பாத்திரம், அம்மி, மஞ்சள் நீர் உள்ள பாத்திரம் ஆகியவை வைக்கப்படும்.

1. விநாயகர்
2. ஓமகுண்டம்
3. அரசாணி
8. சந்திர கும்பம்
9. அம்மி
10 7 ஈசானமூலை - சுவாமி அம்பாள்
11. மஞ்சள் நீர்ப்பாத்திரம் - மோதிரம் போட்டெடுத்தல்

அரசாணியைச் சுற்றி 4 விளக்குகள் 4 நிறைகுடங்கள் வைக்கப்படும் (4, 5, 6, 7) சந்திர கும்பத்திற்கு முன்பாக முளைப்பாலிகை சட்டிகள் வைக்கப்படும்.

குருக்கள் தன் முன்பாக புண்ணியாகவாஷனத்திற்குரியவற்றை வைத்து அதன் பக்கத்தில் மஞ்சள் பிள்ளையாரும், ஒரு கிண்ணத்தில் பஞ்சகவ்வியமும் வைத்திருப்பார். அரசாணி மரமும் அலங்கரிக்கப்பட்டிருக்கும். அதன் இருபக்கமும் ஒரு பக்கம் பாலிகைச் சட்டியும், நடுவில் அம்மியும், அதன்பின்பு சிவன் பார்வதி கும்பங்களும், மறுபக்கம் நவக்கிரக கும்பங்களும், ஆக முன்பாக அரசாணிப் பானையும், நான்கு பக்கமும் நான்கு விளக்குகளும் அரசாணி மரத்தைச் சுற்றி நான்கு கும்பங்களும் வைத்துக் கல்யாண மண்டபம் மேல் கூறியபடி நிறுவப்பட்டிருக்கும்.

## மணமகன் அழைப்பு

திருமணத்தன்று மணமகனை கிழக்கு முகமாக ஒரு பலகையில் இருத்தி அவரின் கைகளில், வெற்றிலையைச் சுருட்டி அதற்குள் சில்லறைக் காசு வைத்துக் கொடுக்க வேண்டும். அவருக்கு முன்னால் நிறைகுடம், குத்துவிளக்கு, தாம்பூலம் வைக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3,5,7 என்ற எண்ணிக்கையில் ஆண்களும், பெண்களும் அறுகும் காசும் பாலும் கொண்ட கலவையை மணமகனின் தலைமையில் 3 முறை வைக்க வேண்டும். மணமகனின் தலையில் ஒரு வெள்ளைத் துண்டை விரித்து அதன்மேல் பாலையிடலாம். முதல் பால்வைக்கும்போது வடக்கு முகமாயிருந்து தாய் மாமன் தேங்காய் உடைக்க வேண்டும். பால் வைத்ததும் மணமகன் போய்க் குளித்து விட்டு வரவேண்டும். பெண்வீட்டாரும் இதில் கலந்து கொள்வார்கள். மணமகன் சாமி அறையில் சாமி கும்பிட்டு கற்பூரம் காட்டி தாய் தந்தையாரை விழுந்து வணங்க வேண்டும். பெண் வீட்டார் மணமகன் வீட்டுக்கு வரும்போது ஒரு தட்டில் வாழைப்பழம், ஒரு தட்டில் பலகாரம், இன்னொரு தட்டில் பூ எல்லாமாக 3 தட்டுக்களுடன் வரவேண்டும். எல்லோருக்கும் விருந்தோம்பல் நடைபெறும்.



## கடுக்கண் பூணல்

முன்னாளில் கடுக்கண் பூணல் என்ற சடங்கும் நடைபெற்றது. இப்போது அது அருகி விட்டது.

மணமகனை கிழக்குமுகமாக அலங்கரிக்கப்பட்ட இடத்தில் இருத்தி விநாயகர் வழிபாடு செய்து தேங்காய் உடைத்து மணமகனுக்கு கடுக்கண் பூட்டு வைபவத்தைச் செய்யலாம்.

## தலைப்பாகை வைத்தல்

மணமகன் கிழக்கு நோக்கி நிற்க ஒரு பெரியாரைக் கொண்டு தலைப்பாகை வைக்கவேண்டும். உத்தரியம் அணிவிக்க வேண்டும். உத்தரியம் இடும்போது இடந்தோளின் மேலாக வந்து வலப்பக்கத்து இடுப்பளவில் கட்ட வேண்டும். (அந்தணர் பூணூல் அணிவது போல்) அங்கு அவருக்கு ஒரு பூமாலையும் அணவிப்பர். தோழனுக்கும் இதேபோல் உடை உடுத்தி தலைப்பாகையும் உத்தரியமும் இட்டு மணமகனோடு அழைத்து வருவர். தோழன் மணமகனின் இடப்பக்கமாக நிற்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் புறப்படுதல்

வீட்டை விட்டப் புறப்படுமுன் வாசலில் இரு சுமங்கலிப் பெண்கள் ஆரத்தி எடுப்பார்கள். மாப்பிள்ளையோடு தோழி (மாப்பிள்ளையின் திருமணமான சகோதரி அல்லது அவர்களின் உறவுமுறையான திருமணமான பெண் தோழியானவள் திருமணச் சடங்கில் முக்கிய பங்கு வகிப்பதால் நடைமுறைகளை நன்கு தெரிந்த சுமங்கலிப் பெண்ணையே அமர்த்த வேண்டும்) தோழன் (பெண்ணின் சகோதரன் அல்லது அவர்களின் உறவு முறையிலுள்ள ஒரு ஆண் அநேகமாக திருமணமாகாதவராக இருக்க வேண்டும்.) ஆகியோருடன் உற்றார், உறவினர் மண மண்டபத்திற்குச் செல்வர். செல்லும்போது தோழி கூறைத்தட்டும் வேறு இரு பெண்கள் 3 தேங்காய் வைத்த தட்டமும், 3 அல்லது 5 பலகாரங்களை கொண்ட ஒரு தட்டமும் எல்லாமாக 3 அல்லது 5 தட்டங்கள் கொண்டு போக வேண்டும். அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் செல்வார்கள்.

## பலகாரத் தட்டம்

அரியதரம், அச்சுப்பலகாரம், பயற்றம் உருண்டை, வெள்ரொட்டி, சிற்றூண்டி போன்றவை.

## தேங்காய்த் தட்டம்

3 முடியுள்ள தேங்காய்களுக்கு சீவி மஞ்சள் பூசி வைக்க வேண்டும்.

## கூறைத் தட்டம்

ஒரு பெரிய தட்டில் நெல் அல்லது ப்ச்சையரிசி பரப்பி அதன்மேல் கூறைச்சேலை, சட்டை, வெற்றிலை 5, முழுப்பாக்கு 3 கஸ்தூரி மஞ்சள் 1, குங்குமம் (டப்பி) 1, தேசிக்காய் 1 , வாழைப்பழச் சீப்பு 1, கொண்டைமாலை, அலங்காரப் பொருட்கள் முதலிய சாதனங்கள் சீப்பு, கண்ணாடி, பவுடர், வாசணைத்திரவியம், சவர்க்காரம் முதலியன, தாலிக் கொடியோடு, மெட்டி 1 சோடி, ஆகியன வைக்க வேண்டும்.

## பெண் புறப்படுதல்

பெண்வீட்டில் பெண்ணுக்கும் அதேபோல், அறுகு, காசு, பால் தலையில் வைத்து நீராட்டி (ருது சாந்தி செய்யாத பெண்ணாகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று அல்லது முந்தைய நாளில் ருது சாந்தி செய்தல் வேண்டும்) மணப்பெண் போல் அலங்கரித்து மணமண்டபத்திற்கு அழைத்துச் செல்லல் வேண்டும். இங்கும் மாப்பிள்ளை வீட்டார் 3 தட்டங்களோடு வந்து விருந்தோம்பி பெண்ணை அழைத்துச் செல்வார்கள். பெண் வீட்டை விட்டு புறப்படுமுன் ஆரத்தி எடுக்கப்படும். பெண் மணமண்டபத்திற்கு மணமகன் வருவதற்கு முன்னதாகச் செல்ல வேண்டும். மணப்பெண்ணோடு ஒரு தட்டில் கோயிலில் அர்ச்சனை செய்யத் தேவையான பொருட்களை அடுக்கி எடுத்துச் செல்ல வேண்டும். மண்டபத்தில் பெண் அவருக்கென்று கொடுக்கப்பட்ட அறையில் இருக்க வேண்டும்.

அர்ச்சனைக்குரிய பொருட்கள் : வெற்றிலை, பாக்கு, தேங்காய், பழங்கள், ஊதுபத்தி, கற்பூரம், பூக்கள்.

## மாப்பிள்ளை அழைப்பு

மாப்பிள்ளை மணமண்டபத்திற்கு வந்தவுடன் அவரை பெண் வீட்டார் மேளதாளத்தோடு வரவேற்பர். அங்கு தோழன் மாப்பிள்ளையின் காலைக் கழுவிவிடுவார். அதற்கு உபகாரமாக மாப்பிள்ளை தோழனுக்கு மோதிரம் ஒன்றை அணிவிப்பார். பின் பெண்ணின் தகப்பன் மாப்பிள்ளைக்கு மாலை சூட்டி வரவேற்பார். இரு சுமங்கலிப் பெண்கள் ஆரத்தி எடுப்பர். பின் தோழன் கைகோர்த்து வலமாக மணவறைக்கு அழைத்துச் செல்வார். (கும்பத்திற்கு வலது பக்கம்)

மணமகன் மணவறைக்கு வந்தவுடன் தொடங்கும் திருமணச்சடங்கு முடியும்வரை புரோகிதரின் தலைமையில் நடைபெறும்.

கிழக்கு நோக்கியிருக்கும் மணவறையில் தோழன் மணமகனுக்கு இடப்பக்கத்தில் அமருவார். மணவறையில் நெல் பரவி அதன் மேல் கம்பளம் விரித்து மணமகனை இருத்துவது தான் மரபு. கிரியை செய்யும் குருக்கள் மணவறையின் வலது பக்கத்தில் வடக்கு நோக்கியிருப்பார். மணமகனுக்கு திருநீறு கொடுத்து பவித்திரம் கொடுத்து வலக்கை மோதிரவிரலில் விநாயகர் பூஜை, பஞ்சகௌவிய பூஜை ஆகியவற்றை மந்திர உச்சானத்துடன் செய்வார்.


பவித்திரம் வலதுகை மோதிர விரலில் அணிய வேண்டும். இந்தச் சடங்கு வைபவம் முடியும் வரை ஒரு குற்றமும் வராமலிருக்கவும் மனம், வாக்கு, காயங்களால் வரத்தக்க பாவங்களினின்றும் காக்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவித்திரம் அணிவிக்கப்படுகின்றது. பஞ்சகௌவியத்தை அவ்விடத்தில் சுற்றித் தெளித்து அதனைப் பருகும்படி மணமகனின் அகமும் புறமும் சுத்தியடையும் என்பதாலும் இவை செய்யப்படுகிறது. இதனை புண்ணியாகவாசனம் என்பர்.

## அரசாணிக்கால்



முற்காலத்தில் திருமண வைபவங்களுக்கு அரசனுக்கும் அழைப்பிதழ் அனுப்புவார்கள். அரசனுக்கும் எல்லாத் திருமணங்களுக்கும் செல்ல முடியாத நிலை இருக்கும். எனவே அவர் தனது ஆணைக்கோலை அனுப்பி வைப்பார். அரசு ஆணைக்கோல் மருவி அரசாணிக்கால் ஆகிவிட்டது. இன்று பதிவுத் திருமணம் போல் அன்று அவரது ஆணைக்கோல் வந்து விட்டால் அரசனால் அங்கீகரிக்கப்பட்டது. ஆகவே அத்திருமணம் அங்கீகாரம் பெற்றுவிடுகிறது. இதுவே இன்று திருமணப் பந்தலில் கலியாண முருங்கை மரக்கிளை ஒன்றை வைத்து அதற்குப் பட்டுச்சாத்தி அலங்கரித்து வைப்பர்.

## அங்குரார்ப்பணம்

வித்திடுதல் என்பதன் அர்த்தம். அதாவது முளைக்கும் விதைகளை பாலிகையிலிடல் என்பது. சந்திர கும்பத்தைப் பூசித்து அதற்கு முன்பாக இருக்கும் மண் சட்டியில் 3 அல்லது 5 சுமங்கலிப் பெண்களைக் கொண்டு நவதானியம் இட்டு தண்ணிர் தெளித்து புஷ்பம் சாத்தி பூசை செய்வது. இதன் அர்த்தம் நவதானியம் செழித்து வளர்வது போல் இத் தம்பதிகளின் வாழ்வும் செழிப்புடையதாக அமைய வேண்டும் என்பதற்காக இப்பூஜை செய்யப்படுகிறது. அப்பெண்களுக்கு வெற்றிலையில் பழம், பூ வைத்து உபசாரம் செய்தனுப்புவார்கள். அதன்பின் கற்பூரம் காட்டப்படும்.

(முன்பே பாலிகை போட்டிருந்தால் தண்ணீர் மட்டும் தெளித்தால் போதுமானது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரட்சாபந்தனம் (காப்புக்கட்டல்)

தொடங்கிய கருமம் நிறைவுபெறும் வரை எந்தவித தீட்டுக்களோ, இடையூறுகளோ, துக்கங்களோ மணமக்களைச் சாராதிருக்க வேண்டிய பாதுகாப்புக் கருதி செய்யப்படுவது (காலமிருத்து, அவமிருத்து போன்ற அபாயங்களிலிருந்து காப்பாற்றவும்) சர்வரோகமும் அணுகாமலும், பீடை, பிணி அணுகாமலும் இருக்க வேண்டி விவாகச் சடங்கு இனிதே நடைபெறவும் கட்டப்படும் நூல் காப்புக்கட்டுதல் ஆகும்.

இதற்கு ஒரு தாம்பாளத்தில் அரிசி பரப்பி தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம், காப்பு நூல் முதலியவற்றை வைத்துப் பூசித்து மாப்பிள்ளையின் வலது மணிக்கட்டில் காப்புக் கட்டுவார்கள். காப்புக் கட்டும்போது மாப்பிள்ளை வீட்டார் ஒரு தேங்காய் உடைப்பார்கள். பின்னர் குருக்கள் சிவன் பார்வதி பூசை முதலியவற்றை மந்திர உச்சானத்துடன் செய்வார். (பின்னர் அக்கினி மூட்டப்பட்டு அதற்குரிய பூசை வழிபாடுகள் நடைபெறும்) முகூர்த்ததோஷம், லக்கினதோஷம் போன்ற தோஷங்கள் நீங்கும் பொருட்டும் இந்தத் திருமணத்தின் பொது நல்லருள் புரிய வேண்டுமென நவக்கிரக தேவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள கும்பங்களுக்கும் பூஜை செய்வார். அதன்பின் அரசாணி மரத்திற்கும் அதன் நாலு பக்கங்களிலுள்ள கும்பங்களுக்கும் பூஜை செய்வார். அதன்பின் அரசாணி மரத்திற்கும் அதன் நாலு பக்கங்களிலுள்ள கும்பங்களுக்கும் பூஜை செய்வார்.

## மணமகளை அழைத்தல்

மணமகளை பட்டாடை அணிந்து, அணிகலன்கள் பூண்டு (முகத்தை மெல்லிய முகத்திரையால் மறைத்த வண்ணம்) தோழிகள், மணமகளின் பெற்றோர் மற்றும் உறவினர் புடைசூழ மணமேடைக்கு அழைத்து வருவர். மணமகனுக்கு வலப்பக்கத்தில் பெண்ணை அமரச் செய்வர். மணமகனுக்குச் செய்யப்பட்ட அத்தனை பூசைகளும் இவருக்கும் செய்யப்படும். பவித்திரம் இடது கைமோதிர விரலில் அணிவித்து ரட்சாபந்தனம் இடக்கை மணிக்கட்டில் கட்டப்படும். பெண் வீட்டார் ஒருவர் தேங்காய் உடைப்பார். பின்னர் இருவரினதும் பெற்றோர்களை அழைத்து மணமகளின் பெற்றோர்கள் பெண்ணின் வலப்பக்கத்திலும் மணமகனின் பெற்றோர் மணமகனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடப்பக்கத்திலும் கிழக்கு நோக்கி அமர்வர். இவர்களுக்கும் குருக்கள், பவித்திரம் விபூதி கொடுத்து சங்கல்பம் செய்வித்து இரு வழியிலும், பிதுர்தோஷம் நீங்கவும் இரண்டு (நாந்தி தானம்) தானம் கொடுத்து பிதிரரின் ஆசியைப் பெறச் செய்வார். பின் கன்னிகாதானக் கிரியைகளை ஆரம்பிப்பார்.

## கன்னிகாதானம்



மணமகளை அவரின் பெற்றோர் தாரைவார்த்துக் கொடுப்பதை கன்னிகாதானம் என்பர். மணமக்களின் பெற்றோர் இருபகுதியினரும் சங்கற்பம் செய்து பெண்ணின் பெற்றோர் மணமகனின் பெற்றோர்க்கும் மணமகனின் பெற்றோர் பெண்ணின் பெற்றோருக்கும் திலகமிட்டு பன்னீர் தெளித்து மரியாதை செய்வர். பின் பெண்ணின் வலக்கரத்தில் வெற்றிலை, பாக்கு , பழம், எலுமிச்சம்பழம், தங்கக்காசு அல்லது நடைமுறை நாணயம் ஒன்றை கையிற் கொடுத்து பெண்ணின் தந்தை இடது கை கீழாகவும் வலகை மேலாகவும் சேர்த்துப் பிடித்துக் குருக்கள் மணமக்களின் மூன்று தலைமுறைப் பெயர்களையும் மணமக்களின் பெயர்கைளயும் உரிய மந்திரத்துடன் 3 முறைகள் சொல்லி இரு வம்சம் தழைக்கவும், அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய 4 பயன்களையும் பெற வேண்டியும் எனது மகளைக் கன்னிகாதானம் செய்து தருகிறேன். எல்லாவித செல்வமும் பெற்று எனது மகளைக் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டிக் கொள்வார். மணமகனின் சம்மதம் பெற்றவுடன் மணமகளின் தாயார் நீர் விட்டு தாரைவார்க்கத் தந்தையார் மணமகளின் கைகளை மணமகனின் கரங்களில் ஒப்படைப்பார். அப்போது மங்கள வாத்தியம் முழங்க, பெண்வீட்டார் ஒருவர் தேங்காய் உடைக்க, மணமகன் பெண்ணைத் தானம் எடுப்பார். தொடர்ந்து மணமகன் கொண்டுவந்த தாலியோடு கூடிய கூறைத்தட்டத்தை விதிப்படி பூசித்து, ஆசீர்வதித்து அக்கினியாற் சுத்தி செய்தபின் அச்சபையிலுள்ள பெரியோர்களிடம் காட்டி நல்லாசி பெறப்படும். பின் மணமகன் மணமகளிடம் கூறையைக் கொடுப்பார். மணமகளும் தோழியுடன் சென்று கூறையை உடுத்தி மீண்டும் மணவறைக்கு அழைத்து வரப்படுவார். இதற்கிடையில் குருக்கள் மாங்கல்யத்தை எடுத்து சுத்தி செய்து மந்திரம் சொல்லி சந்தனம், குங்குமம் சாத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபம் காட்டி சம்பாதஹோமம் செய்து பூசை செய்வார்.
(சம்பாதஹோமம் - சிருவத்தில் நெய் எடுத்து ஆகுதி செய்து மிகுதி நெய்யைத் தாலியில் விடுதல்)

மணவறையைச் சுற்றி நிற்பவர்களுக்கு அட்சதை மலர்கள் கொடுக்கப்படும்.

## தாலிகட்டுதல்

கூறை உடுத்தி வந்த மணமகள் மீண்டும் மணமகனின் வலப்புறத்தில் கிழக்கு நோக்கி அமர்வார். குறித்த சுபமுகூர்த்தத்தில் மணமகன் எழுந்து மணமகளின் வலப்புறம் சென்று வடக்கு நோக்கி நின்று இறைவனைத் தியானித்து குருக்கள் ஆசீர்வதித்துக் கொடுக்கும் மாங்கல்யத்தை இரு கரங்களால் பற்றி கெட்டிமேளம் முழங்க, வேதியர் வேதம் ஓத, மாப்பிள்ளை வீட்டார் ஒருவர் தேங்காய் உடைக்க, பெரியோர் அட்சதை மலர்கள் தூவ, ஒரு பெண் பின்னால் தீபம் பிடிக்க மணமகன் மேற்கு திசை நோக்கித் திரும்பிப் பெண்ணின் கழுத்தில் திருமாங்கல்யம் பூட்டுவார். அப்போது சொல்லப்படும் மந்திரம்.

> ''மாங்கல்யம் தந்துநாநேந மம ஜீவனஹேதுநா
> கண்டே பத்தாமி ஸுபகே ஸஞ்ஜிவசரதசதம்''

'ஓம்! பாக்கியவதியே' யான் சிரஞ்சீவியாக இருப்பதற்குக் காரணமான மாங்கல்யத்தை உன் கழுத்தில் கட்டுகிறேன். நீயும் நூறாண்டு வாழ்வாயாக என்று குருக்கள் கூறும் மந்திரத்தை மனதில் கொண்டு தாலி முடிச்சில் திருநீறு இட்டு தனது இடத்தில் இருக்க வேண்டும். மணமகளின் உச்சந்தலையில் குங்குமத்தால் திலகமிட வேண்டும்.

தாலி - தாலியில் சிவலிங்கம், விநாயகர் அல்லது லட்சுமியின் திருவுருவம் அமைத்தல் நல்லது கொடியும், தாலியும் அதனருகில் கோத்திருக்கும் இரு தங்க நாணயங்களும் சேர்ந்து (9, 11...) என்ற ஒற்றை எண் வரக்கூடிய அளவு பவுணில் செய்யதல் வேண்டும். தாலிக்கொடியில் சேர்க்கப்படும் தங்க நாணயம் ஆங்கில நாணயமாக இருக்க வேண்டும் என்ற நியதியில்லை. அந்த நாணயத்தில் கடவுளின் உருவங்களும் விருப்பத்திற்கேற்ப அமைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலை மாற்றுதல்



மணமகள் எழுந்து வடக்கு நோக்கி இறைவனைத் தியானித்து மணமகன் கழுத்தில் மாலை சூட்டுவாள். மணமகன் மணமகளைத் தன் இடப்பக்கத்தில் அமரச்செய்து மாலை சூட்டுவான். மாலை மாற்றுதலின் பொருள் இருமனம் கலந்து ஒரு மனமாகி இல்வாழ்க்கையை ஆரம்பித்தல். மூனறு முறை மாலை மாறறல வேண்டும்.

தொடர்ந்து கொண்டு வந்த மங்கலப் பொருட்களாகிய மஞ்சள், குங்குமம், பூ, வாசனைப் பொருட்கள், சீப்பு, கண்ணாடி முதலியவற்றை மணமகன் மணமகளிடம் கொடுப்பார். கணவன் மனைவியாக ஆனபின் தம் மங்கலக் கோலத்தை இருவரும் கண்ணாடியில் பார்த்து மகிழ்வர்.

## பால்பழம் கொடுத்தல்

பால், வாழைப்பழம் கலந்து மணமகள் முதலில் மணமகனுக்கு மூன்று முறை கொடுப்பார். பின் மணமகன் மணமகளுக்கு மூன்று முறை கொடுப்பார். நாயகன் நாயகி உணவு கொள்ளல் மறைவில் செய்ய வேண்டுமென்பதால் திரை ஒன்று முன்னால் பிடிக்கப்படும். முதன் முதலில் தம்பதிகளுக்குக் கொடுக்கும் இனிப்புப் பதார்த்தமாகையால் வாழ்க்கை இனிமையாக இருக்க வேண்டும் என்று உணர்த்தவே இச்சடங்கு.

## கோதரிசனம்

இல்லறவாழ்வு தொடங்கும் தம்பதியர் வாழ்விற்கு வேண்டிய அட்ட ஐஸ்வரியங்களையும் வேண்டி பசுவை இலட்சுமிதேவியாக வணங்குவர். பசுவைக் கிழக்கு முகமாக நிறுத்திச் சந்தனம், குங்குமம், புஷ்பம் சாத்தித் தீபாரதனை செய்து வணங்குபவர். பசுவின் உடலெங்கும் உறைகின்ற சகல தேவர்கள், முனிவர்கள், தெய்வங்களின் ஆசீர்வாதமும் இதன்மூலம் கிடைக்கும். அரிசி, காய்கறி, தட்சிணை வைத்துத் தானம் வழங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாணிக்கரகணம் (கைப்பிடித்தல்)

தருமம் செய்வதற்காகவும் சந்ததி விருத்திக்காகவும் திருமணம் செய்யப்படுகிறது. பாணிக்கிரகணம் என்றால் மணமகளின் கையை மணமகன் பிடிப்பது என்று பொருள். 'நீயும் நானும் முதுமையடைந்து




விட்டாலும் கூட ஒருவரை விட்டொருவர் பிரியாதிருப்போம் என்று கையைப் பிடிக்கிறேன்' என்று கூறி மணமகளின் கையைப் பிடிக்க வேண்டும். ஆணின் வலக்கை பெண்ணின் வலக்கையைப் பிடிக்க வேண்டும். பின்னர் ஏழடி எடுத்துவைத்து அம்மி மிதித்து அக்கினியை வலம் வருவார்கள். வலம் வரும்போது தோழனும் தோழியும் சேர்ந்து வருவர். பஞ்ச பூதங்களின் சாட்சியாக கையைப் பிடிப்பதாக ஒருகருத்து. மணப்பெண்ணால் ஐம்புலன்களால் செய்யப்படும் செயல்கள் கணவனுக்கு மட்டுமே உரியவை. கன்னியின் கையை வரன்கிரகிப்பது என்பது பொருள்.

## ஏழடி நடத்தல்

பெண்ணின் வலக் காலை மணமகன் கைகளாற் பிடித்து ஏழடி எடுத்து வைக்கும் படி செய்ய வேண்டும். ஒவ்வொரு அடிக்கும் ஒவ்வொரு மந்திரம் சொல்லப்படும்.

1. உனக்கு வாழ்க்கையில் உணவு குறைவில்லாமல் அளிப்பதற்கு இறைவன் உன்னைப் பின் தொடர்ந்து வரட்டும்.
2. உடல் வலிமை கிடைக்க இறைவன் பின் தொடரட்டும்.
3. விரதத்தை அனுஷ்டிக்கும் பொருட்டு உன்னை இறைவன் பின் தொடர்ந்து வரட்டும்.
4. சுகமும் மனச்சாந்தியும் கிடைக்க இறைவன் உன்னைப் பின் தொடரட்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பசுக்கள் முதலான வளர்ப்புப் பிராணிகள் விருத்தியடைய இறைவன் உன்னைப் பின் தொடர்ந்து வரட்டும்.

6. சகல சௌபாக்கியங்களும் கிடைக்க பின் தொடர்ந்து வரட்டும்.

7. உன் வாழ்க்கையில் இடம்பெறும் சுபகாரியங்கள், ஹோமங்கள் குறையின்றி நிறைவேற இறைவன் உன்னைப் பின் தொடர்ந்து வரட்டும். ஏழடிகள் நடந்த நாமிருவரும் சினேகிதரானோம். இருவரும் சேர்ந்து இந்த ஏழு செல்வங்களையும் ஈட்டுவோம். இன்பதுன்பங்களைச் சேர்ந்தே அனுபவிப்போம். என்னுடன் கூடவா' எனும் பொருளில் இந்நிகழ்ச்சி அமையும் இதற்கு ''ஸப்த பதி'' என்று பெயர்.

## அம்மி மிதித்தல்

பெண்ணின் வலதுகாலை (அதாவது எட்டாவது அடி) மணமகன் கையால் தூக்கி அம்மியில் வைத்து பெருவிரலுக் கடுத்துள்ள விரலில் மெட்டி அணிவிப்பார். இந்தக் கல்லைப் போல் நிலையாக நின்று உன் எதிரிகளைச் சகித்துக்கொள். இது பெண்ணுக்குக் கற்பையும் ஆணுக்கு ஒழுக்கத்தையும் புகட்டுகிறது. கல் எப்படி எதையும் தாங்குமோ அதுபோல் வாழ்க்கையிலும் இன்ப துன்பங்களைக் கண்டு கலங்காமல் உறுதியான கொள்கைகளைக் கடைப்பிடித்து நடக்க வேண்டும் என்று உணர்த்துகிறது.

தொடர்ந்து அக்கினியை வலம் வந்து ஓம குண்டத்தில் நெற்பொரியும் ஓமப்பொருட்களையும் இடுவார்கள். திரும்பவும் இரண்டாம் முறை அக்கினியை வலம் வரும்போது இடக்காலை அம்மியில் வைத்து மெட்டி அணிவிக்கப்படும். திருமணமான பெண் அவளைப் பார்க்கும் இன்னொரு ஆடவன் அவள் திருமணமானவள் என்பதை உணர்த்த மெட்டி அணிவிக்கப்படுகிறது.


## கணையாழி எடுத்தல்

மூன்றாம் முறை அக்கினியை வலம் வரும்போது கிழக்குப் பக்கத்தில் வைத்திருக்கும் மஞ்சள் நீர் நிறைந்த பாத்திரத்தில் இருக்கும் தேடி எடுக்க வேண்டும். இது மூன்று முறைகள் நடைபெறும். இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து எடுத்தல் வேண்டும். இது தம் வாழ்க்கையிலும் விட்டுக்கொடுத்து வாழ வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருந்ததி பார்த்தல்

மூன்றாம் சுற்றில் அருந்ததி பார்த்தல் நடைபெறும். இருவரையும் கூட்டிக்கொண்டு மண்டபத்தின் வடக்கு வாசலக்கு வந்து வானத்தில் இருக்கும் நடசத்திரங்களுக்குப் பூஜை செய்து அருந்ததியைக் காண்பிப்பார்.



''நிரந்தரக் கற்பு நட்சத்திரமாக மின்னுவேன்'' என்று ஆணையிடுவதாகும். சப்தரிசிகள் கிருத்திகை எனப்பெயர் கொண்ட தங்கள் மனைவிகளுக்குள்ளே முதலானவளான அருந்ததியை எப்படி நிலைத்திருக்கச் செய்தார்களோ அப்படி மற்ற ஆறு கிருத்திகைகளும் அருந்ததியைப் போலிருக்கச் செய்கின்றனர். இந்த அருந்ததியை தரிசனம் செய்வதால் என்னுடைய மனைவி எட்டாமளவாக வளர்ச்சி பெறட்டும் என்பதேயாகும். இந்த நடசத்திரத்தைக் காட்டுவது நல்ல வாழ்க்கையும் வளத்தையும் பெறுவதற்கேயாகும்.

அருந்ததி வசிட்டரின் மனைவி. சிறந்த பதிவிரதை. வானத்தில் துருவ மண்டலத்திற்கு அருகில் ஏழு நட்சத்திரங்களுக்கிடையில் வசிட்ட நட்சத்திரமும் அதன் அருகில் அருந்ததி இருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன.

அருந்ததியோடு சேர்த்து துருவ நட்சத்திரத்தையும் காட்டுவார்கள். துருவ நட்சத்திரம் விண்ணில் ஒரு நிலையான இருப்பிடத்தை உடையவராகவும் மற்ற விண்மின்கள் நிலைத்திருப்பதற்கும் காரணமாகவும் கட்டுத்தறியாகவும் இருப்பதால் எங்களை எதிரிகளிடமிருந்து காப்பாற்றுவீராக என்று தரிசிப்பதாகும். இவர்கள் எம்வாழ்க்கையில் ஒரு வழிகாட்டியாக அமைகிறார்கள். துணைவனைப்போல் மணமகனுக்கு ஸ்திரத்தன்மையும் அருந்ததியைப் போல் மணமகளுக்குப் பதிவிரதாதன்மையும் இருத்தல் வேண்டும்.

## பொரியிடுதல்

அக்கினியை மூன்று முறைவலம் வரவேண்டும். ஒவ்வொரு முறையும் வலம்வந்து மணமக்கள் கிழக்கு நோக்கி நிற்கத் தோழன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்பொரியைக் குருக்களிடம் இருந்து பெற்று மணமகனின் கையில் கொடுக்க மணமகன் மணமகளின் கையில் கொடுத்து மணமகளின் கைகளைத் தன் கைகளால் தாங்கி ஓம குண்டத்தில் இடுவார்கள். ''அக்கினி பகவானே சகல செல்வங்களையும் எமக்குத் தந்தருள வேண்டும்.'' என வேண்டிக்கொண்டு பொரியிடுதல் வேண்டும். நெல் பொரியாக மலர்வதுபோல் நம்வாழ்வு மலரவேண்டும் என்பதே தத்துவம்.

மூன்றாம் முறை சுற்றி வந்தவுடன் பூர்ணாகுதிக்குரிய பொருட்களை தட்டத்தில் வைத்து குருக்கள் மணமக்களுக்குக் கொடுக்க இருவரும் சேர்ந்து குண்டத்தில் சொரிதல் வேண்டும்.

அக்கினி பகவானிடம் சேர்க்கும் சகல திரவியங்களும் அக்கினி பகவான் அந்த அந்தத் தெய்வங்களிடம் ஒப்படைத்து விடுவார் என்பதை வேதங்கள் கூறுகின்றன. ஆகவே அக்கினியில் ஆவாகனம் செய்யப்பட்ட மூர்த்திகளுக்கு செய்யும் சடங்கு குறைவின்றி செய்து அவர்களுக்குப் பரிபூரண பலன் வேண்டி அனுப்ப வேண்டும் என்று பிரார்த்தித்து செய்வதே ஓமம்.

அதன் பின் தீபாரதனை செய்து ஓமத்திலிருந்து எடுக்கப்பட்ட ரட்சயை (கரிப்பொட்டு) மணமக்களுக்குத் திலகமிட்டு விபூதி சந்தனம் கொடுத்து ஆசி வழங்குவார் குருக்கள்.

## ஆசீர்வாதம்

மணமக்களை கிழக்கு முகமாக நிற்க வைத்தக் குருக்கள் பிரார்தனை செய்து மந்திரத்துடன் ஆசீர்வாதம் சொல்லி மணமக்களுக்கு சிரசில் அட்சதையிட்டு ஆசீர்வதிப்பார். தொடர்ந்து மணமகனின் பெற்றோர். மணமகளின் பெற்றோர் சபையோர் ஆசீர்வதிப்பர்.



## அட்சதை

முனை முறியாத பச்சையரிசி, அறுகம்புல், மஞ்சள்மா கலந்த கலவையே அறுகரிசி என்று சொல்வார்கள். பெரியோர் இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளாலும் அறுகரிசி எடுத்து ''ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி மூங்கில் போல் சுற்றம் முழுமையாய்ச் சூழப் பதினாறு பேறு பெற்றுப் பெருவாழ்வு வாழ்க'' என வாழ்த்தி உச்சியில் 3 முறை இடவேண்டும். உறவினர்களும், நண்பர்களும் மணமக்களுக்கு அன்பளிப்பு வழங்கி மகிழ்வர்.

## நிறைவு

மணமக்களின் கைகளில் கட்டப்பட்ட காப்புக்களை அவிழ்த்து பவித்திரங்களை கழற்றி அவற்றுடன் பெற்றாரின் பவித்திரங்களையும் வெற்றிலையில் வைத்து குருக்களின் தட்சணையும் சேர்த்துக் குருக்களிடம் கொடுக்க வேண்டும். குருக்களுக்கு அரிசி, காய்கறி தானம் வழங்கப்படும்.

## ஆரத்தி

இரு தரப்பிலுமிருந்து ஒரு பெண்ணாக இரு சுமங்கலிப் பெண்கள் ஆரத்தி எடுப்பார்கள். தம்பதிகளுக்கு தீய சக்தியினால் தீமை ஏற்படாமலும் கண் திருஷ்டி நீங்கும் பொருட்டும் இவை செய்யப்படுகின்றன.

விருந்துபசாரமும் நடைபெறும். மணமக்களை இருவரும் அர்ச்சனை தட்டோடு ஆலயம் சென்று வணங்கி அர்ச்சனை செய்து மணமகள் இல்லம் செல்வர். அங்கு வாசலில் ஆரத்தி எடுத்து வலது காலை முதலில் வைத்து வீட்டுக்குள் செல்வர். முதலில் பூசை அறைக்குள் சென்று வணங்கிய பின் பால் அருந்தக் கொடுப்பார்கள்.

## பூதாக்கலம்

மணமக்கள் ஒரே இலையில் மணமகள் உணவு பரிமாறி மணமகனுக்கு முதலில் தன் கையால் உணவூட்டிய பின் மணமகன் மணமகளுக்கு உணவூட்ட வேண்டும்.

பின் மணமகன் மணமகளைத் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்வார். அங்கும் ஆரத்தி எடுத்து உட்செல்வர். வலது கால் எடுத்து உட்சென்று பூசை அறைசென்று வணங்கி பெற்றோரின் காலிலும் விழுந்து வணங்குவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தாலி கட்டிய பின் மணமகன் மணமகளின் உச்சந்தலையில் குங்குமத்தால் திலகமிடுவார். இது அவள் தன் கணவனுக்கே உரியவள் என்பதை எடுத்துக்காட்டவே. அத்தோடு அவ்விடத்தில் தான் மகாலட்சுமியும் வாசம் செய்கிறாள்.

- மாங்கல்யம் சூட்டும்போது கெட்டிமேளம் கொட்டுவது சபையில் உள்ளோர் யாராவது தும்முதல், அபசகுண வார்த்தைகள் பேசுதல் போன்றவை மணமக்களுக்குக் கேட்கக் கூடாது என்பதற்காகவே.

- மஞ்சள் கயிற்றில் தாலி கட்டும்போது மூன்று முடிச்சுப் போடுவார்கள். இதற்கு ஒரு விளக்கம்.

**முதலாவது முடிச்சு** – கணவனுக்குக் கட்டுப்பட்டவள் அல்லது பிறந்த வீட்டுக்கு

**இரண்டாவது முடிச்சு** – தாய் தந்தையருக்கு கட்டுப்பட்டவள் அல்லது புகுந்த வீட்டுக்கு

**மூன்றாவது முடிச்சு** – தெய்வத்திற்குப் பயந்தவள்.

தாலி கட்டும்போது தூவப்படும் அட்சதை மணமக்களை தீய சக்திகளிடமிருந்து காப்பதற்கும் வளமான வாழ்க்கை அமைவதற்கும் ஆசீர்வதிப்பதாகும். தாலி கட்டும்போது கைவிளக்கு ஏந்தி நிற்பது, ஏனென்றால் தாலி கட்டியதற்கு விளக்கு ஏந்தியவர் ஒரு சான்றாவார். இன்னொரு விளக்கம் சகுனத் தடைகள் ஏற்படாமலிருக்க.

**திருமணத்தின் போது மணப்பெண் முகத்திரை அணிவது ஏன்?**

முக்காலத்தில் மணமகள் தாலி கழுத்தில் ஏறும் வரை மணமகனைப் பார்ப்பதில்லை. ஆகவே முகத்திரை அணிந்து மணவறைக்கு அழைத்து வந்தார்கள். அத்தோடு கண் திருஷ்டிகளிலிருந்தும் விமர்சனங்களிலிருந்தும் விடுவிப்பதும் ஒரு காரணமாகும். தாலி ஏறியதும் முகத்திரையை அகற்றி நான் இப்போது ''இவரின் மனைவியாகிவிட்டேன்'' என்று சபையோருக்குத் தன் முகத்தைக் காட்டுகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்சதை

அட்சதை என்றால் குத்துப்படாததும், பழுதற்றதும் என்று பொருள்படும். பழுதுபடாத பச்சைஅரிசியைப் போல் வாழ்க்கையும் பழுதுபடாமல் இருக்கவேண்டும் என்பதற்காகவே ஆசி வழங்கும்போது பெரியவர்கள் அதைத் தெளிக்கிறார்கள் (நுனி முறியாத முழு அரிசியாக இருக்க வேண்டும்.)

நெல்லிலிருந்து பிரித்தெடுத்த முளையுள்ள அரிசியுடன் மஞ்சள்மா, பன்னீர், மலர் இதழ்கள் ஆகியவற்றைக் கலந்து அட்சதை தூவுவதே முறையாகும்.

## ஆரத்தி

ஒரு தட்டில் 3 வாழைப்பழத் துண்டுகளை வைத்து அதன் நடுவே திரியைச் செருக வேண்டும். இலகுமுறை ஒரு நெருப்புக்குச்சியில் பஞ்சைச்சுற்றி நெய்யில் தோய்த்த வாழைப்பழத்தின் நடுவே குத்துவதாகும். தட்டில் திருஷ்டி கழிப்பதற்காக மஞ்சளும் சுண்ணாம்பும் சிறிது நீர்விட்டுக் கலந்து வைக்கவும். இக்கலவை சிவப்பு நிறமாக மாறிவரும். அவசரத்திற்குக் குங்குமம் பாவிக்கலாம். (வெளிநாடுகளில் இருப்பவர்கள் சுண்ணாம்புக்குப் பதில் அப்பச்சோடா (சோடியம் பைகாபனேற்) பாவிக்கலாம்)

ஆரத்தி எடுக்கும்போது யாருக்கு திருஷ்டி கழிக்கிறோமோ அவரை நிற்க வைத்து (கிழக்கு முகமாக அல்லது வடக்குப் பார்க்க நிற்க வேண்டும்.) அவரை இறைவனாக நினைத்து இறைவனுக்கு நாம் எப்படிக் கற்பூரம் காட்டுகிறோமோ அதேபோல் ஆரத்தித் தட்டைச்சுற்ற வேண்டும் (வலம் சுழியாக)

மணமக்களுக்கு எடுக்கும்போது மணமகன் பக்கத்தில் மேலேழும்பி மணமகள் பக்கமாக கீழிறங்க வேண்டும். கீழே 3 முறை செய்ய வேண்டும். கீழே 3 தரம் ஆட்டி பின் மேலெழுப்பிச் சுற்ற வேண்டும்.

## திருமணத்தில் அறுகரிசி இடும் முறை

எமது இந்துசமய விளக்கப்படி அறுகரிசியை (அட்சதை) பெரியோர்கள் இரு கைகளிலும் எடுத்து மணமக்களின் சிரசில் தூவிப்பின் இரு தோள்களிலும் இடுப்பு, முழந்தாள் என்று மேலிருந்து கீழே வர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்த வேண்டும். (3 முறை) அல்லது சிரசில் மட்டும் 3 முறை தூவி ஆசீர்வதிக்கலாம்.

நாங்கள் மணமக்களை தெய்வமாகக் கருதுவதால் தெய்வத்திற்குப் பாதத்திலிருந்த சிரசிற்குச் செல்ல வேண்டும் என்று சொல்வார்கள். மணமக்களை மானிடராகக் கருதினால் சிரசிலிருந்து பாதத்திற்கு வரவேண்டும் என்றும் சொல்வார்கள். இவ்விரண்டு விதமான வருணனைகளையும் எமது இலக்கியங்களில் காணலாம். பதாதி கேசமா? கேசாதி பாதமா? இவை வர்ணனைகளே அன்றி அட்சதை தூவுவதற்கல்ல. தெய்வத்திற்கு நாம் செய்வது பாத பூஜை பூ சொரிவதல்ல. அத்தோடு மணமக்களை பெரியோர்களே அட்சதை தூவி ஆசீவதிப்பவர்கள். ஆகவே சிரசில் இருந்து தான் வரவேண்டும். மீனாட்சி சுந்தரேசர் கல்யாணத்தில் தேவர்கள் வானிலிருந்து மலர்தூவி ஆசீர்வதித்து வாழ்த்துவதாகப் புராணம் சொல்கின்றது. ஆகவே அரிசி மேலிருந்து கீழே வருவது தான் சாலப்பொருந்தும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ அபரக்கிரியை

எல்லாச் சமயங்கட்கும் அவற்றிற்கெனத் தனித்தனியே பல சமயச் சடங்குகள் இருப்பதை நாமறிகின்றோம்.

சைவராகிய எமக்கு பிறப்பு முதல் இறப்பு வரையும் இறப்பின் பின்னரும் பல சமயச் சடங்குகள் நடைபெறுகின்றன. இவையாவும் சிவாகமங்கள் விதித்தபடி நடைபெறுகின்றன அப்படியே நடைபெற வேண்டியது இன்றியமையாதது. சைவர் ஒருவரின் மரணத்தின் பின்னர் நடைபெறும் சடங்குகள் அபரக்கிரியை எனப்படும். (அபரம் - பிந்தியது) இக் கிரியைகளின் மூலமாக பயனை அந்த ஆன்மா பெறுகின்றது. பிதிர்கள் பிரமனால் படைக்கப்பட்டவர்களாகும். இக்கிரியைகளைச் செய்பவர்கள் தன, தானிய சம்பத்து, புத்திரலாபம், முதலிய ஐஸ்வரியங்களும் பெற்று வாழ்தலுடன் மறுமையில் நற்கதியையும் அடைவார்கள். அவர்களுக்கு தீவினையும் வறுமையும் இடரும் நீங்கும் செய்யாது விடின் ஏழுபிறப்பிலும் பிதிர் தோஷம் ஏற்படும்.

அபரக்கிரியையில் சூர்ணோத்ஸவம், தகனம், அஸ்திசஞ்சனம் (கடாற்று), அந்தியேட்டி, பாஷாணபூசை (கல்லெடுப்பு) ருத்திரபலி (பிரபூதபலி) நவசிராத்தம், ஏகோத்திரவிருத்தி சம்கிதை இடபதானம் வதரணிகோதனம், சபிண்டீகரணம் (வீட்டுக்கரியை) சிராத்தம் முதலிய கிரியைகள் நடைபெறுகின்றன.

இவற்றில் விசேட அந்தியேட்டி நிருவாண அந்தியேட்டி ஆகியவை பிரேதத்திலேயே (கட்டையிலே) தகனத்திற்கு முன்னர் நடைபெறும் மச்சமாமிச போசனமற்ற நாலாம் வருணத்தாருக்கும் பிரேதத்தில் சமய அந்தியேட்டி தகனத்திற்கு முன் செய்யப்படும்.

மேற்குறிப்பிட்ட கிரியைகளைக் கல்வியறிவு ஒழுக்கங்களிற் சிறந்த ஆசாரியாரைக் (குரு) கொண்டு செய்விக்க வேண்டும். இவற்றைச் செய்விப்பவர்களும் (கர்த்தா) கிரியைகளின் தத்துவங்களையும் அவற்றின் பலன்களையும் அறிந்து பக்தி சிரத்தையுடன் அன்புடனும் செய்தால் நன்மை பயக்கும் இக் கிரியைகளில் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானங்கள் செய்யப்படுகின்றன. தானம் என்பது நற்பயன் குறித்துச் செய்யப்படுபவை. எனவே இத்தானத்தை சற்புத்திரருக்கு (கல்வி, அறிவு, ஒழுக்கமுற்றவர்) செய்தாற் தான் குறித்த பயனைப் பெறலாம்.

நாலாம் வருணத்தாருக்கு சைவாகம விதிப்படியே சைவக்கிரியைகள் நடைபெறவேண்டியது. எமது அபரக்கிரியையில் சூர்ணோத்சம் தொடக்கம் பாஷாண பூசை வரையுள்ள கிரியைகளை சைவ ஆசாரியார்களும், சபிண்டீகரணம் சிராத்தம் முதலிய கிரியைகளைப் பிராமண ஆசாரியார்களும் செய்து வைக்கிறார்கள்.

சமய தீட்சை பெற்று நாலாம் வருணத்தாருக்கும் முப்பது நாள் ஆசௌசமுடையவர்களுக்கும் உரிய கிரியைகளையும் அதன் தத்துவங்களையும் விளக்கங்களையும் ஓரளவு விளக்கிக் காட்டியுள்ளோம். கிரியை செய்யும் முறைகள் அவற்றுக்குரிய மந்திரங்கள் ஆகியவை இடம்பெறவில்லை.

ஒருவர் நோய்வாய்ப்பட்டு அல்லது வயோதிபமடைந்து மரணப்படுக்கையில் இருக்கும்பொழுது அவரது பாவங்கள் நீங்கி நற்கதி அடையும் பொருட்டு கோ(பசு)தானம் செய்யப்பட வேண்டும். இதனை உத்திராந்தி தானம் என்பர், இது உயர் உடலை விட்டுப்பிரியும் போது செய்யும் கிரியையாகும் பின்னர். திருமுறைகள் ஓதவேண்டும். திருநீறு அணிவித்து, புண்ணி தீர்த்தம் அல்லது பால், பருக்கி , வலது காதில் பஞ்சாட்சர மந்திரம் ஓதவேண்டும். மரணித்தவரை குளிப்பாட்டி அலங்காரம் செய்து தர்ப்பைப்புல் பரப்பி தெற்கு பக்கம் தலை வைத்துக் கிடத்தல் வேண்டும். தலைப்பக்கம் விளக்கேற்றி வைக்கவேண்டும்.

## மரணச்சடங்கு - சூர்ணோத்சவம்

தந்தை தாயாருக்கு, மூத்த புதல்வனே கிரியை செய்ய வேண்டும். தந்தைக்கு சிரேஷ்ட புத்திரனும், தாயாருக்கு கனிஷ்ட புத்திரனும், கிரியை செய்யும் வழக்கம் உண்டு. புத்திரர் தவிர்ந்த பின்வருவோருக்கும் கிரியை செய்ய உரிமை உடையவர் 1) புத்திரன் 2) மனைவி 3) மகள் 4) தமையன் 5) இளையசகோதரர்
6) சகோதரன் புதல்வன் 7) பிதா 8) தாய் 9) மருமகன் 10) சகோதரி 11) சகோதரி புத்திரன் 12) பிதாவழிச் சபிண்டன் 13) சமானோதகன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14) தாய்வழிச் சபிண்டன் 15) தாயின் சமானோதகன் 16) சீடன் 17) குரு 18) மகள் கணவன் 19) தோழன் 20) அரசன் இவர்களுள் புத்திரனே பிரதானமானவன். பிரதானகர்த்தா இல்லையானால் அடுத்தவர் வரிசையாகப் பிரதானமானவர். சில நூல்களில் 32 பேர்கள் கூறப்பட்டுள்ளன. புத்திரன் அல்லாத ஒருவர் கர்த்தாவாகக் கிரியை செய்வதாகில் அவர் தனது பெற்றோரில் ஒருவருக்காவது கிரியைசெய்த வராக இருத்தல் வேண்டும்.

புத்திரர் இங்கில்லாத காரணத்தினால் மரணக்கிரியை வேறு ஆசௌச வழியிலுள்ள ஒருவர் செய்தால் புத்திரர் பின்னர் வருவராகில் எஞ்சிய கிரியைகளைப் புத்திரர் செய்யலாம் அதேபோல் புத்திரர் மரணக்கிரியைகளை செய்து மற்றைய கிரியைகளுக்கு நிற்க முடியாது விட்டால் மற்றைய கிரியைகளை வேறு ஒருவர் கர்த்தாவாக இருந்து செய்யலாம். ஆனால் இவரையும் ஆரம்பக் கிரியையிலே கர்த்தாவுடன் சேர்த்து கிரியைகள் செய்ய வேண்டும்.

அந்தியேட்டி கிரியை மாத்திரம் 21 நாட்களுக்கு மேலும் 31 நாட்களுக்குள்ளும் செய்யலாம் . புத்திரர் வெளியூர் போக வேண்டும் என்பதற்காக இத்தினங்கட்கு முன்னதாக அந்தியேட்டி சபிண்டீகரணம் முதலியவற்றை செய்ய முடியாது. மரணக் கிரியை நடைபெற உள்ள .இடத்தில் மண்டபம் அமைத்து வெள்ளை கட்டி மாவிலை தோரணம் பூச்சரம் முதலியவற்றால் அலங்கரித்து அந்த இடத்தை கோமயத் தினால் மெழுக வேண்டும் மரணக்கிரியையின் போது (பக்தி ஸ்தோத்திரம்) திருமுறைகள் ஓதல் வேண்டும்.

மரணக்கிரியையில் சூர்ணோத்சவம் செய்யப்படும். நடுவில் ருத்திர கும்பமும் அதனைச் சுற்றி அட்டதிக்குப் பாலகர் கும்பமும் மேற்கு பக்கத்தில் புண்ணியாகவாசன கும்பமும் கிழக்கு பக்கத்தில் உரல் உலக்கை கும்பம் ஆகியவை வைக்கப்படும் இக்கும்பத்தை மயானத்திற்கு கொண்டு செல்வது வழக்கமாகவுள்ளது. குரு உரியகிரியைகள் பூசைகள் வழிபாடுகள் செய்வார்.

அபிஷேகம் முதலியன செய்யும் பொருட்டு பிரேதத்தை வீட்டின் தென்புறத்தில் வடக்கு நோக்கிக் (தெற்கு பக்கம் சிரசாக) கிடத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். பின்னர் கர்த்தா அரப்பு எண்ணெய் முதலியன சிரசில் வைப்பார். ஆசௌசகாரர்களும் அரப்பு எண்ணெய் முதலியன வைப்பார்கள். பின்னர் அரிசிமா, மஞ்சள்மா, அபிஷேக கூட்டு (ஆமலகம்) பால், தயிர், இளநீர், முதலியவற்றால் அபிஷேகம் செய்யவேண்டும். கர்த்தா மேற்கு முகமாக நின்று சங்காரக்கிரமமாக அதாவது கீழிருந்து மேலாக கர்த்தாவின் புறங்கையினால் வேறு ஒருவர் உதவியுடன் இவ்வபிஷேகம் நடைபெறுதல் வேண்டும். பின்னர் கும்ப அபிஷேகம் நடைபெறும் அதாவது பன்னீர் போன்ற வாசனைப் பொருட்கள் முதலியவற்றைச் சிரசில் சாத்த வேண்டும் பின்னர் பிரேதத்தை அலங்கரித்து மண்டபத்திற்குக் கொண்டு வந்து தெற்குப் பக்கமாக தலையை வைத்து திருநீறு சங்காரக் கிரமமாக சாத்த வேண்டும் பின்னர் சுண்ணம் இடிக்கப்படும்.

அறுகு, மஞ்சள்பொடி, என்பவற்றை உரலில் இட்டு மணியடித்து 81 பத மந்திரம் சொல்லி எட்டு தரம் இடித்து பின்பு திருப்பொற் சுண்ணப் பாட்டுப் பாடி சுண்ணமிடிக்க வேண்டும். பின்னர் சுண்ணப்பொடியை கர்த்தா பிரேதத்தின் இரு கண்களிலும் சாத்தி நீருடன் சேர்த்து பிரேதத்தின் முழு உடலிலும் தெளித்தல் (புரோட்சித்தல்) வேண்டும். இது தற்காலம் நடைபெறும் முறையாகும் சுண்ணமிடித்து சுண்ணப் பொடியும் சேர்த்து பிரேத அபிஷேகம் நடைபெற வேண்டும் என்பது சாஸ்திர விதியாகும்.

பின்னர் பெண்கள் வாய்க்கரிசி இட்டு பிரேதத்தின் வாய், கை, கால், விரல்கள், ஆகியவற்றைக் கட்டி பூத உடலை வஸ்திரத்தால் மூடிக்கட்டி பாடையில் வைத்து கால் முன்பக்கமாக மயானத்திற்கு கொண்டு செல்லவேண்டும். கர்த்தா நெருப்புச் சட்டியுடன் பூத உடலுக்குப் முன்பாகவும், துடக்கு உரிமையாளர்கள் பூத உடலுக்குப் பின்பாகவும் செல்ல வேண்டும். துடக்கு இல்லாதவர்கள் பின் செல்லல் கூடாது மயானத்தை அடைந்து தெற்கே சிரசாக முதலில் தலைப்பக்கமும் பின்னர் கால் பக்கமுமாக இறக்கி மயானத்தில் வடக்குத் தெற்காக விறகுகளை அடுக்கி அதன் மேல் பூத உடலை வைத்து சுற்றத்தார் வாய்க்கரிசி போடுதல் வேண்டும். பின்னர் கர்த்தா மட்குடத்தை இடது தோளில் வைத்து சிதையை (அப்பிரதட்சணமாக) இடப்பக்கமாகச் சுற்றி வந்து குடத்தைத் தலைப்பக்கத்தில் வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதையை (அப்பிரதட்சணமாக) இடப்பக்கமாகச் சுற்றி வந்து குடத்தைத் தலைப்பக்கத்தில் வைத்து கும்பஜலம், அரிசி, சொர்ணம், (பவுண்) அல்லது காசுடன் வாய்க்கரிசியிட்டு பின்னர் குடத்தை முன்போல இடத்தோளில் வைத்து கொள்ளியைக் கையில் கொண்டு சிதையை இடப்புறமாக மூன்று முறை சுற்றிவரவேண்டும். ஒவ்வொரு சுற்றுக்கும் குடத்தில் கத்தி நுனியால் துவாரமிட்டு குடநீர் ஒழுகும்படி செய்து மூன்றாவது சுற்று முடித்து தலைப்பக்கத்தில் தெற்கு முகமாக நின்று பின் புறமாக பிரணவம் சொல்லிக் கொள்ளியை பிரேதத்தின் சிரசில் வைத்து குடத்தை முன் புறமாக உடையும்படி போட்டு விட்டு பின்பு கால் மாட்டில் சென்று பவித்திரம் பூணூல் ஆகியவற்றை சிதையில் போட்டு (தனக்கு மூத்தவராகில்) விழுந்து நமஸ்கரித்து திரும்பிப் பாராமற் செல்ல வேண்டும்.

மரணித்தவரும், கர்த்தாவும் மச்ச மாமிச போசனம் இல்லாதவர் களாயின் இறந்தவருக்கு உடன் மயானத்திலே அந்தியேட்டிக் கிரியை செய்து தகனம் செய்யப்படும்.

## அஸ்தி சஞ்சயனம் - காடாற்று - சாம்பல் அள்ளல்

தகனத்திற்கு அடுத்த நாள் அல்லது மூன்றாம், ஐந்தாம், ஏழாம், ஒன்பதாம் நாள்கள் ஒன்றில் அஸ்தி சஞ்சயனம் செய்க. தகனம் செய்யப்பட்ட இடத்தை கால் பக்கமாக இருந்து தலைப்பக்கமாக தண்ணீர் ஊற்றி அக்கினியை அணைக்கவும். தலைப்பக்கத்தில் விளக்கேற்றி கும்பம் வைத்து பூசை அபிஷேகம் திரவியங்களை வைக்கவும் மண்கலசத்தில் பால் ஊற்றிஅதை தலைப்பக்கத்தில் ஒரு முக்காலியில் வைக்கவும் தகிக்கப்பட்ட உடல் எலும்பு மேனியில் (சங்காரக் கிரமமாக) அபிஷேக திரவியங்களால் அபிஷேகம் செய்க.

கர்த்தா மேற்கு நோக்கி நின்று புறங்கையால் இன்னொருவரின் உதவியுடன் அபிஷேகம் செய்யவேண்டும் பின்னர் முழங்கால்கள் (சத்தியோசதம்) நாபி (வாமதேவம்) மார்பு (அகோரம்) நெற்றி (தற்புருஷம்) தலை (ஈசானம்) ஆகிய ஐந்து இடங்களில் விபூதி, சந்தணம், புஸ்பம் வைத்து தூபதீபம் காட்டி பூசித்து மேற்குறிப்பிட்ட ஐந்து இடங்களில் உள்ள எலும்புகளில் ஒவ்வொன்றையும் கிரமப்படியே எடுத்து தலைமாட்டில் உள்ள பாலுள்ள கலசத்தில் வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கலசத்தை வஸ்திரத்தால் மூடவும் பின்னர் மிகுதி எலும்புகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ஒரு கடகத்தில் எடுத்து வைக்கவும் பின்னர் அவ்விடத்தை சுத்தம் செய்து பண்படுத்தி நவதானியம் விதைத்து நெற்பொரி, மாஅடை, தாம்பூலம், பழம் முதலியவைகளைப் பூதம் பிரேத பைசாசங்களின் பொருட்டு பலியிட்டு முன்னர் கலசத்தில் எடுத்த அஸ்தி சாம்பலையும் புண்ணிய தீர்த்தம் சமுத்திரம் ஆகியவற்றில் கர்த்தா வடக்குமுகமாக நின்று தெற்குப் பக்கமாக போட்டுக் கரைத்து விடவும் பின்னர் கர்த்தா அந்த நீர்நிலையில் ஸ்நானம் செய்து அங்கு நக்கினப் பிரசாதனம் என்னும் நக்கின தானம் செய்ய வேண்டும். ஒரு குடத்தில் பச்சை அரிசியை நிரப்பி அக்குடத்தைச் சுற்றி வஸ்திரம் கட்டி வெங்கலப்பாத்திரத்தில் (விளக்கு) நெய்யூற்றி குடும்பஸ்தராக உள்ள சிவப்பிராமணருக்கு சிவனைத் தியானித்துத் தானமாகத் கொடுக்கவும் இறந்தவரின் நிருவாணம், பசி, தாகம், இருள்களை நீக்கும் பொருட்டு இத்தானம் செய்யப் படுகின்றது. அஸ்தியின் ஒரு பகுதியை அந்தியேட்டிக் கிரியைக்காவோ அல்லது காசி கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் கரைப்பதற்காகவோ எடுத்து வைப்பது தவறாகும்.

## எட்டுக் கிரியை

இக்கிரியை பற்றி பத்திரிகைகளிலோ, ஆகமங்களிலோ எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் இது ஒரு நாட்டு வழக்கமாக வந்துள்ளது. தகனத்தினம் தொடக்கம் சபிண்டீகரணம் வரை இறந்தவரது படத்தை வீட்டில் ஒரு இடத்தில் வைத்து விளக்கேற்றி, தண்ணீர், இளநீர் வைத்து தாம் உண்ணும் உணவில் ஒரு சிறிய பகுதியை அங்கு படைத்து தூப தீபம் காட்டி பூசித்துவரும் வழமை உண்டு. அஸ்தி சஞ்சயனத்தின் பின் எட்டாம் நாளுக்கு முன்னர் ஒரு தினத்தில் இறந்தவர் விரும்பிச் சாப்பிட்ட எல்லாப் பண்டங்களும் (உண்பன, தின்பன, பருகுவன) படைத்து தூப தீபம் காட்டி பூசித்து எட்டுக்கிரிகையை முடிப்பார்கள். (சில ஊர்களில் மச்சமாமிசம் உண்பவர்களாக இருப்பினும் அந்தியேட்டி முடியும்வரை மச்சமாமிசம் படைப்பதில்லை) துடக்குகாரர்கள் அங்கு சாப்பிடுவார்கள். (இவை பிரபூதபலி என்ற கிரியைக்கு சமனாக நடைபெறுகிறது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி - கல்லெடுப்பு

அந்தியேட்டி, சமய அந்தியேட்டி, விசேட அந்தியேட்டி, நிருவான அந்தியேட்டி என மூன்று வகைப்படும். இங்கு சமய அந்தியேட்டி பற்றிய விபரங்களே தரப்படுகின்றன. விசேட அந்தியேட்டி பிரேதத்தில் (கட்டையில்) தகனத்திற்கு முன்னர் செய்யப்படும். மச்சமாமிசம் புசியாதவர்க்கும் சமய அந்தியேட்டி பிரேதத்தில் செய்யப்படும். அந்தியேட்டி இறந்த 21ம் நாளின்மேல் 31ஆம் நாள்களுக்குள் செய்யலாம் புத்திரன் அல்லாத வேறு ஒருவர் கர்த்தாவாக இருப்பின் சுப நாள் பார்த்து அந்தியேட்டி செய்ய வேண்டும். நதிக்கரை, குளக்கரை, நந்தவனம், வீடு ஆகிய இடங்களில் அந்தியேட்டி செய்யலாம். அந்தியேட்டி என்பது இறுதியிற் செய்யும் யாகம் எனப் பொருள்படும். பிரேத சரீரத்திற்குப் பதிலாக தர்ப்பையினால் சிறு உருவம் செய்யப்பட்டு அந்தியேட்டி கிரியை செய்யப்படும். சூர்ணோத்தவக்கிரியை எல்லாம் முடித்து உருவத்தை தகனம் செய்வார்கள். இதைப் புனர்தகனம் எனக் குறிப்பிடுவர். பின்பு அங்குபாஷாணம் (கல்லு) ஸ்தாபித்து அதற்கு அபிஷேகம் பூஜை முதலியன செய்து தர்ப்பணம், பிண்டம், ருத்ரபலி, பிரபூதபலி (முன்னர் எட்டுக்குச் செய்ததுபோன்று) செய்யப்படும். இங்கு 30 பிண்டங்கள் இடப்படும். இப்பிண்டங்கள் பச்சை அரிசிச்சாதம், கறிவகைகள், பலகார வகைகள், பழவகைகள், பட்சணங்கள் ஆகியவை சேர்த்துப் பிசைந்து உருட்டி இடவேண்டும். வாஸோதகம் (சீலையோடு சேர்த்துத் தர்ப்பணம்) கிலோதகம் (எள்ளோடு சேர்த்து தர்ப்பணம்) செய்யப்படும். இங்கு 525 தர்ப்பணம் செய்யப்படும். இவை ஏகோத்திரவிருத்தி என அழைக்கப்படும். ருத்ரபலி சிவப்பிரீதியின் பொருட்டு செய்யப்படுவது. பின்னர் பாஷாணத்துக்கு தூபதீபம் காட்டி பூசை முடித்து, கும்பம், பாஷாணம், பிண்டம் ஆகியவற்றை அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் வைத்து மங்கல வாத்தியத்துடன் எடுத்துச் சென்று நீர்நிலையடைந்து பிண்டத்தை ஒருவரும், அவர்பின் கும்பத்தை ஒருவரும், அவர்பின் பாஷாணத்தை ஒருவருமாக எடுத்துச் சென்று கர்த்தா இடுப்பளவு தண்ணீரில் வடக்கு முகமாக நின்று தலைக்கு மேலாகவும் தெற்கு பக்கமாக பிண்டத்தை முன்னும், பின்னர் கும்பத்தை வடக்கு பக்கமாகவும், பாஷாணத்தை தலைக்கு மேலாகவும் தெற்குப் பக்கமாக ஜலத்தில் விட்டு ஸ்நானம் செய்துவிட்டு, வீட்டு வாசலை அடைந்து வேப்பிலை தின்று, அக்கி, சாணம், மண், வெண்கடுகு ஆகியவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்பரிசித்து (தொட்டு) கல்லின் மேல் கால்வைத்து (வீட்டிற்குள் செல்லவும். கர்த்தாவுக்கு ஆரத்தி எடுப்பதும் உண்டு. உலக்கையை கடந்து செல்லும் வழக்கமும் உண்டு. இவை வைதீகக்கிரியை முறையாகும்)

## வீட்டுக் கிரியை - சபிண்டிகரணம்

வீடு கழுவிச் சுத்தம் செய்யு புண்ணியாகவாசனம் செய்த பின்னர் வீட்டுக் கிரியை செய்ய வேண்டும். அந்தியேட்டி கிரிகையை முப்பதாம் நாளும் வீட்டுக் கிரிகையை முப்பத்தோரம் நாளும் நம்மவர்கள் செய்வது வழமையாக உள்ளது. எமக்கு துடக்கு முப்பது நாள்கள் அதாவது முப்பத்தோராம் நாள் காலையில் தான் துடக்கு நீங்கும். அதன் பின்னர்தான் புண்ணியாகவாசனம் செய்ய வேண்டும். முப்பதாம் நாள் அந்தியேட்டி செய்து அன்று புண்ணியாகவாசனம் செய்து வீட்டுக்கிரியை சமையல் ஆயத்தங்கள் செய்ய முடியாது. எனவே முப்பத்தோராம் நாள் புண்ணியாகவாசனம் செய்து முப்பத்தி இரண்டாம் நாள் வீட்டுக்கிரியை செய்யலாம். (முப்பத்தோராம் நாள் அந்தியேட்டி செய்து அன்று மாலை புண்ணியாகவாசனம் செய்வதும் நல்லது)

வீட்டுக்கிரியை பிராமண ஆசாரியரைக் கொண்டு செய்தல் வேண்டும். தானம் ஏற்கும் தகுதி பிராமணருக்குத்தான் உண்டு முதலில் விக்கினேஸ்வர பூசை புண்ணியாகவாசனம், பஞ்ச கவ்வியபூசை, முதலியன கிரியைகளைச் செய்து நவசிராத்தம், ஏகோசிராத்தம், ஏகோத்திர விருத்தி, சம்கிதை, இடபதானம், ஏகோதிட்டம், மாசிகங்கள், சோதகும்ப சிராத்தம், சபிண்டீகரணம் ஆகிய கிரியைகள் நடைபெறும்.

## நவசிராத்தம்

நவம்-புதியது; எனவே முதலில் செய்யும் சிராத்தம், நவசிராத்தத்தால் பிரேதத்தன்மை நீங்கும். சந்தனம், புஸ்பம், தூபதீபமின்றி பச்சை அரிசி, காய்கறி வகைகள், தானம் செய்வது நவசிராத்தமாகும்.

## ஏகோத்தம் விருத்தி

இதை இங்கு இரணிய தானமாகச் செய்யவும் - விபரம் அந்தியேட்டிக் கிரியையில் சொல்லப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்கிதை - சங்கிதை சிராத்தம்

இச்சிராத்தம் செய்வதால் தீட்சை பெற்றுக்கொண்டபின் ஆசாரத்தில் வந்த குற்றம் நீங்கும்.

## இடபதானம் - இடபோத்சர்ணம்

எருதுக்கு அலங்காரம் செய்து அதனைப் பூசித்து தானம் செய்தல், இறந்தவருடைய தானதரும பலன்களைத் தரும் வடிவிலான இடபத்தின் மூலம் சிவபெருமானிடத்தில் சேர்ப்பித்தல். ஆன்மாவை இறைவனது திருவருள் வழியின் கண் நிற்குமாறு செய்தலாகும். இடப தானத்திற்கு எருது கொடுக்க வசதியில்லாதவர்கள் ஒரு தாம்பாளத்தில் அரிசியைப் பரப்பி அதிலே இடபதேவரை ஆவாகனம் செய்து பூசித்து வழிபாடு செய்த பின்னர் கர்த்தாவானவர் தமது இருகரங்களாலும் இடபதேவரைப் பற்றி ஒவ்வொரு திக்கிலும் கொண்டு சென்றதாகப் பாவித்து அதற்குரிய மந்திரங்களைக் கூறி வழிபாடு செய்து அதனை தட்சணை முதலியவற்றுடன் தானமாகக் கொடுக்கவும்.

## ஏகோதிட்டம்

இது இறந்தவரைக் குறித்து செய்யப்படும் தானமாகும். சற்புத்திரரான ஒரு குருவை மேற்கு முகமாக இருக்கச் செய்து ஆசனம் கொடுத்து, சந்தனம், புஷ்பம், எள்ளு ஆகியவை கொடுத்து உபசாரங்கள் செய்து கர்த்தாவின் சக்திக்கு தக்கவாறு தானங்கள் கொடுக்க வேண்டும். ஏகோதிட்டத்திற்கு இருபத்து நான்கு தானங்கள் சொல்லப்பட்டுள்ளன. அவையாவன பவித்திரம், பூணூல், கமண்டலம், உருத்திராக்கம், பாதுகை, (மிதியடி) தண்டம், கௌபீனம், விபூதிப்பை, யோகபட்டம், குடை, குல்லாய், மேல்வஸ்திரம், (சால்வை) வஸ்திரம், பொன், ரத்தினம், நெய், வெண்ணெய், பசு, பூமி, போசனத்திற்கு வேண்டிய பொருட்கள், இவற்றில் சர்வதானியங்கள், சர்வ அலங்காரப் பொருட்கள், இவற்றில் சிலவற்றை இரணியதானம் (காசு), ஆகவும் கொடுக்கலாம். பின்னர் ஏகோதிட்டம் ஒரு பிண்டமிட்டு அதற்கு சந்தன புத்திர புஸ்பம் சாத்தி தூபதீபம் காட்டி பூசிக்கவும். ஏகோதிட்டக் குருவை வழியனுப்பி அந்த இடத்தைச் சுத்தி பண்ணி கர்த்தஸ்நானம் செய்யவேண்டும். ஆசாரியர் மீண்டும் புண்ணியாவாசனம் செய்து பஞ்சகவ்வியத்தினாலே தன்னையும் கர்த்தாவையும் இடத்தையும் பொருளையும் சுத்தம் செய்து கொள்வார். ஏகோதிட்டம் ஏற்கும் குருவை இறந்தவராக வரித்துச் செய்வதினால் அங்கு ஆசௌசம் ஏற்படுகின்றது. இதனாலேதான் மேற்கூறியவாறு சுத்திகள் செய்யப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாசிகங்கள்

மாசிகங்கள் முதல் வருடம் முழுவதும் இறந்த திதியின் செய்யப்படும் சிரார்த்தமாகும். ஏகோதிட்டத்தோடு முதல் மாசிகம் முடிவுற்றதாக கருதப்படும் எஞ்சியிருப்பது பதினோரு திகதியில் வரும் மாசிகமாகும். இவற்றுடன் இடைக்கால மாசிகங்கள் நான்கு சேர்ந்து பதினைந்து மாசிகங்கள் கொள்ளப்படும். இறந்த திகதியிலிருந்து 27ம் நாளுக்குமேல் 30ம் நாள்களுக்குள் செய்வது ஊன மாசிகம். 40 நாள்களுக்குமேல் 45ம் நாள்களுக்குள் செய்வது ஊன திரிபட்ச மாசிகம். 170ம் நாள்களுக்கு மேல் 180ஆம் நாட்களுக்கிடையில் செய்வது ஊனஷான மாசிகம். 350ஆம் நாள்களுக்கு மேல் 365ம் நாள்களுக்குள் செய்வது ஊன ஆப்தீக மாசிகம். இந்த இடைக்கால நான்கு மாசிகங்கட்கும் திதி நியமம் கொள்ளப்படுவதில்லை. செய்யும் தினம் சுப தினமாக இருக்க வேண்டும். இந்தப் பதினைந்து மாசிகங்களையும் ஒன்றுசேர்த்து ஏகோதிட்டத்திற்குப் பின்னர் செய்வது வழக்கம். மாசிகதானம் செய்து ஒரு மாசிகத்திற்கு ஒரு பிண்டமாக பதினைந்து பிண்டமிட்டு சந்தனம் பத்திர புஸ்பம் சாத்தி தூபதீபம் காட்டிப் பூசித்து தர்ப்பணம் செய்யவேண்டும். மேற்குறிப்பிட்டபடி 15 மாசிகங்களையும் ஒன்றாகச் செய்தாலும் அந்த மாசிகங்களையும் மாதாந்தம் அந்தந்த திதியில் செய்வது முறையாகும். சபிண்டீக்குப் பின் மாதா மாதம் செய்யப்படும், மாசிகங்கட்கு நிமித்தர் பிண்டம் தேவையில்லை. பிரதிர்களுடன் ஒன்றாகவே கொண்ட மூன்று பிண்டம் இடுக.

## சோதகும்பசிரார்த்தம் - சொர்க்கபாதேயம்

நீர் நிறைந்த பாத்திரத்தை அன்னத்துடன் தானம் செய்யவும். இச் சிரார்த்தத்தால் பசி, தாகம் தீரும்

## வைதரணி கோதானம்

பசுவை தானமாகக் கொடுக்கவும். இது இரணிய தானமாகவும் செய்யலாம். வறியவர்கள் தட்டமொன்றில் அரிசி அல்லது நெல் பரப்பி பசுவின் படம் வரைந்து அதனை தானமாகவும் கொடுப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபிண்டீகரணம்

சபிண்டீகரணம் செய்வதன் பொருள் ஆத்மாவின் பிரேதத்தன்மை நீங்கி பிதிர்த்துவ தன்மை அடைதலாகும். அதன் மூலம் இறந்த உயிர் தன் பிரேதத்துவ தோஷம் முற்றாக நீங்கி பிதிர்த்துவத்தை அடையினும் அடையும். அல்லது தேவத்துவமடையினும் அடையும் தனக்குத் தகுதியுண்டேல் சிவத்துவத்தை அடையும். இக்கிரியையில் தேவர் பொருட்டு நந்தி மாகாளர் என இருவரும், பிதிரர் பொருட்டு கந்தர், சண்டர் கணாதீசர் என மூவரும் அதிதி அப்பியாகதர் என இருவரும் நிமித்தர் ஒருவரும் (இறந்தவரின் பொருட்டு நியமிக்கப்படுவர்) ஆகிய எண்மர் சபிண்டீயில் அமர்த்தப்படுவர். தேவர் இருவரும் மேற்குபக்கத்தில் வடக்கு முகமாகவும், நிமித்தர் கிழக்குப் பக்கத்தில் மேற்குமுகமாகவும், மற்றைய இருவரும் நிமித்தருக்கு வடக்கே மேற்கு முகமாகவும் அமர்த்தப்படுவர். இவர்களுக்கு ஆசனம் கொடுத்து உபசாரங்கள் செய்து பூசைகள் முடித்து தானங்கள் கொடுத்து பின்னர் சபிண்டீகரணம் நடைபெறும். குறிப்பிட்ட உபசாரங்கள் பூசைகள் தேவர்கள் பொருட்டு இருத்தப்பட்ட குருமாருக்குச் செய்யும்பொழுது கர்த்தா பூணூலை வலது பக்கமாக அணிய வேண்டும். சபிண்டீயில் பிண்டதானம் ஒரு முக்கிய அம்சமாகும். வாழையிலையை தெற்கு முகமாக போட்டு தெற்கு முகமாக இரு தர்ப்பைகள் வைத்து மேற்கு தர்ப்பையில் இறந்தவர் தந்தையாகில் பிதா, பாட்டன், பூட்டன் ஆகியோருக்கும் கிழக்கு பக்கத் தர்ப்பையில் இறந்தவருக்காக (நிமித்தர்) பெரிய அளவு பிண்டம் இடவேண்டும். இறந்தவர் தாயாராகில் இதே போன்று தாய், பாட்டி, பூட்டி ஆகியோருக்கும் பிண்டம் இடவேண்டும். பிண்டம் வடக்கிலிருந்து தொடங்கிய வரிசையாக தெற்குநோக்கி இடல்வேண்டும். தெற்குநோக்கி இருந்து இடது முழங்காலை ஊன்றியிருந்து பிண்டம் நோக்கி தர்ப்பணம் இடவேண்டும். பின்னர் பிண்டத்திற்கு மஞ்சள், சந்தனம், பத்திரபுஷ்பம் முதலியன சாத்தி தூபதீபம் காட்டிப் பூசிக்க வேண்டும்.

நைவேத்தியங்கள் வைத்து பூசைவழிபாடு செய்து திருமுறை ஓதி சமரகவிபாடி தர்ப்பணம் செய்து கர்த்தாவும் உறவினர்களும் வணங்கி முடிவில் நிமித்த பிண்டத்தில் சாத்தப்பட்ட பத்திர புஷ்பங்களை எடுத்து பிதிரர் பிண்டத்தோடு சேர்த்தல்மூலம் இறந்த நிமித்தர் பிதிரர்களோடு ஒன்றானார் என்று கருதப்படுகிறது. நிமிர்த்த பிண்டத்தை மூன்று பகுதியாக பாகம் செய்து பிதிரர் பிண்டங்களுடன் தனித்தனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்க்கும் முறையும் உண்டு. சபிண்டியில் தகப்பன் அல்லது தாய் பிள்ளைகளுக்கு செய்தலும் தமையன் தம்பிக்கு செய்தலும் தாய்மாமன் மருமகளுக்குச் செய்தலுமாகிய மூத்தோர் இளையோருக்கு பிண்டம் இடும்பொழுது நிமித்தர் பிண்டம் மாத்திரம் இட்டுக் கிரியைகளை முடிக்குக.

பச்சை அரிசிமா, உழுத்தம்மா, பால், தயிர், நெய், தேன், எள்ளு இவை பிண்டத்திற்கு சேர்க்கப்படும் பொருள்களாகும்.

இங்கு ஒரு விடயத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். புத்திரன் அல்லது புத்திரி அல்லாத ஒருவர் கிரியை செய்தால் பிண்டம்போடும் போது இறந்தவருக்கு (பிதிரருக்கு) மட்டும் பிண்டம் போடவேண்டும். இது ஏகோதிட்ட விதானம், பிதா, பாட்டன், பூட்டன் ஆகியோருக்கு பிண்டம் போடக்கூடாது. புத்திரன் புத்திரி பிண்டம்போடும் பொழுது பாட்டன், பாட்டி உயிருடன் இருந்தால் அவர்கட்கு பிண்டம் போடக்கூடாது. ஆசாரியாருக்கு பாட்டன் பாட்டி உயிருடன் இருக்கும் விடயத்தை தெரிவிக்காது விட்டால் தவறுகள் ஏற்படும்.

கிரியை முடித்த பின்னர் குருமாருக்கு தட்சணை கொடுத்து வணங்கி ஆசீர்வாதம் பெற்று அவர்களை வலப்பக்கமாகப் பின் தொடர்ந்து சென்று வழியனுப்புக. தட்சணை என்பது அவரவா வசதிக்கேற்ப அமையலாம். பிண்டத்தைப் பசுவுக்கு கொடுக்கவும் அல்லது புண்ணிய தீர்த்தத்திலே போடவும்.

## ஆப்திக சிராத்தம்

இதை ஆட்டைத்திவசம் எனக்கூறுவர். முதலாவது வருட முடிவில் இறந்த திதியிற் செய்யப்படும் சிராத்தம். இதில் நிமித்தருக்குப் பிண்டம் இல்லை இதுவே அபரக்கிரியைகளின் பூர்த்தியாகும்.

## வருட சிராத்தம்

வருடா வருடம் இறந்த திதியிற் சிராத்தம் செய்யப்படும் என்பது சிரத்தையுடன் செய்யப்படுவது எனப்பொருள்படும். மகன் தந்தைக்குச் சிராத்தம் செய்யும் பொழுது தகப்பன், பேரன், பூட்டன் ஆகிய மூவருக்கும் பிண்டங்கள் கிழக்குப் பக்கமாக உள்ள தர்ப்பையிலும் வம்சத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்சத்தில் உள்ள பிதிரர்கள் எல்லோருக்குமாக ஒரு பிண்டத்தை மேற்குப் பக்கமாக உள்ள தர்ப்பையிலும் இடப்படல் வேண்டும். மகன் தாயாருக்குச் செய்யும் சிராத்தத்தில் தாய், தகப்பனுடைய தாய், பேரனுடைய தாய் ஆகிய மூவருக்கும் மூன்று பிண்டங்களும் வம்சபிண்டம் ஒன்றும் இடுதல் வேண்டும்.

பிள்ளையில்லாத கணவனுக்கு அல்லது மனைவிக்கு இருப்பவர் ஒருவர் சிராத்தம் செய்யலாம். அப்படி எவரும் செய்யாது போனாலும் பாவம் இல்லை.

தாய் தகப்பன் இருவருக்கும் ஒரே தினத்தில் சிராத்தம் வந்தால் இரு சிராத்தங்களையும் செய்யலாம் (ஆசௌச காரணத்தினால் இப்படி வரலாம்)

மறதியில் சிராத்தம் செய்யத் தவறின் வேறு தினத்தில் அச்சிராத்தம் செய்யக்கூடாது. எதிர்வரும் அமாவாசைத் தினத்தில் அச்சிராத்தத்தை செய்யலாம். சிராத்தம் கர்த்தாவுக்கு இயலுமான காலம் வரை செய்ய வேண்டும்.

## சிராத்தம் செய்யுமிடம்

தன் வீடு, திருநந்தவனம், மலை, புண்ணிய தீர்த்தக்கரை, திருக்கோயில், குருவின்மனை ஆகிய இடங்களில் சிராத்தம் செய்யலாம்.

## சிராத்தம் செய்யும் காலம்

சூரியன் உதயம் முதல் ஆறு நாழிகை வரை (6.00-8.24) பிராதக் காலம். அதற்குமேல் 12 நாழிகைவரை (8.24-10.48( சங்ககாலம். அதற்கு மேல் 18 நாழிகைவரை (10.48- 1.12) மத்தியான காலம். அதற்கு மேல் 24 நாழிகை வரை (1.12 - 3.36) அபரான்ன காலம். அதற்குமேல் 30 நாழிகைவரை (3.36 - 6.00) சாயாரன காலம். மத்தியான காலத்தில் (10.48 - 1.12) ஏகோதிட்டமும் அபரன்ன காலத்தில் (1.12 - 3.36) பிதிர் சிராத்தமும் செய்க. (சூரிய உதயம் 6 மணிக்குப் பிந்தினால் அங்ஙனம் பிந்திய நிமிடத்தைக் காட்டுக.)

## சிராத்த தினத்தில் செய்யத்தக்கவைகள்

சிவன்கோயிலில் அபிஷேகம், பூசை முதலியவை செய்யலாம். வறியவர்களுக்கு அன்னதானமும் கொடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிராத்த தினத்தில் செய்யத் தகாதவைகள்

நெல்குத்துதல், பிச்சையிடுதல், தயிர்கடைதல், நெய் முதலிய பொருள்களை வாங்குதல், கொடுத்தல் வீண் பிரச்சனைகளில் ஈடுபடல் முதலியன தகாதவை.

## சிராத்தத்திற்குரிய திரவியங்கள்

எள்ளு, பச்சைஅரிசி, கோதுமை, பயறு, உழுந்து, சர்க்கரை, தேன், பசுவின்பால், தயிர், நெய், எண்ணெய், உப்பு, புளி, மிளகு, சீரகம், மஞ்சள், கடுகு, இஞ்சிக்கிழங்கு, வாழையிலை, வாழைத்தண்டு, வாழைக்காய், வாழைப்பழம், தேங்காய், இளநீர், புடலங்காய், பயற்றங்காய், அவரைக்காய், பாகற்காய், எலுமிச்சங்காய், நெல்லிக்காய், சிறுகிழங்கு, வள்ளிக்கிழங்கு, கீரை முல்லையிலை, முசுட்டையிலை, காரையிலை, பிரண்டை, கருவேப்பிலை, வெற்றிலை, பாக்கு, ஏலம், சுக்கு, கராம்பு, சாதிக்காய், சாதிபத்தரி, முதலியனவாம், (மிளகாய், பூசனிக்காய், கத்தரிக்காய், முதலியன சேர்க்கலாம் எனச் சில நூல்களில் சொல்லப்பட்டுள்ளது)

## ஆகாத திரவியங்கள்

கடலை, பீர்க்கங்காய், நீற்றுப்பூசணிக்காய், சுரைக்காய், கத்தரிக்காய், அத்திக்காய், முருங்கைக்காய், வாழைப்பூ, வெங்காயம், வெள்ளைப்பூண்டு, கொவ்வை, எருமை, ஆடு ஆகியவற்றின் பால், தயிர் முதலியனவாம்.

## சிராத்தத்துக்கு உபயோகமாகும் பத்திர புட்பங்கள்

துளசி, வில்வம், தாமரை, சண்பகம், அறுகு, புண்ணை, நந்தியாவர்த்தம், எள்ளுப்பூ, மருக்கொழுந்து, வெட்டிவேர் முதலியன

## ஆகாத பத்திர புட்பங்கள்

மகிழம்பூ, தாழம்பூ, அலரிப்பூ, சிறுசண்பகப்பூ முதலியன

## மஹாளயம்

புரட்டாதி மாதத்து அபட்சம் (அமாவாசைக்கு முன் 15 நாட்கள்) பிதிரர்களின் திருப்திவேண்டி இச்சிரார்த்தம் செய்யப்படும். வருட சிரார்த்தம் செய்ய இயலாதவர்கள் மஹாளயமாவது செய்யவேண்டும். மற்றைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரார்தங்களில் ஏற்படும் குறைகளுக்கு இது சாந்தியாக அமையும். தந்தை தாய் இருவரும் இறந்திருப்பின் இருவருக்குமாக பிண்டமிடல் வேண்டும். இது பிதிர்களுக்கு இராப்போசனமாகும்.

அமாவாசை நாளில் விரதமிருந்து பிதிர் திருப்திக்காக எள்ளும் தண்ணீரும் இறைத்தல் தந்தை தாய் வர்க்கம் இரண்டினுக்கும் இது நன்மை பயக்கும் இவை ஆண்டுத்திதியின் பின் செய்யப்படும்.

## தநிஷ்டா பஞ்சமி

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களில் மரணித்தால் பஞ்சமி தோஷமுண்டு. இறந்த வீட்டில் கும்பம் தீபம் ஜலம் இவைகளை வைத்து பசுமாடு கட்டிவைத்து வீட்டில் நெற்பொரி நவதானியம் தூவுதல் வேண்டும். அவிட்ட நற்சத்திரத்திற்கு மூன்று மாதமும் பூரட்டாதி நட்சத்திரத்திற்கு ஒரு மாதமும் ரேவதி நட்சத்திரத்திற்கு அரைமாதமும் தோஷமாம் நீங்க பஞ்சமி சாந்தி செய்யவேண்டும்.

## துர்மரணம்

துர்மரணம் அல்லது அவமிருந்து அடைந்தவருக்க கிரியை செய்யாது தகனம் செய்யவேண்டும். துர்மரணமடைந்தவருக்கு அங்கமெதுவிதிலும் குறைவுபடாமலிருந்தால் ஆறு மாதத்தின் மேல் இறந்த திதியிலே அந்தியேட்டி முதலிய கிரியைகளைச் செய்யலாம். அங்கங்களில் குறைவுபட்டிருந்தால் ஒரு வருடத்தின் பின்னர் இறந்த திதியில் கிரியைகளைச் செய்யலாம். வைரவ சாந்தி செய்து கிரியை செய்யவும்.

## நாந்தி சிரார்த்தம்

விவாகம் முதலியன சுபகாரியங்கள் நடைபெறும் தினம் அல்லது அதற்கு முன்தினம் பிதிரர்களுடைய ஆசீர்வாதம் பெறும் பொருட்டு இரணிய தானமாக (காசு) இவை செய்யப்படும். பிதிர் வழிபாடு செய்யாது எந்த நற்காரியமும் செய்யக்கூடாது.

## தர்ப்பணம்

வலது கையில் எள்ளையும் தர்ப்பையும் வைத்து வலது கைக்கட்டை விரலுக்கும் சுட்டு விரலுக்கும் நடுவாக விழும்படி தர்ப்பணம் செய்யவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிண்டம் இடுதல்

பிண்டம் இடும்பொழுது கர்த்தா தெற்கு முகமாக முழங்காலை ஊன்றிக்கொண்டிருந்து வலதுகைப் பெருவிரலிடையினால் பிண்டம் இடுதல் வேண்டும்.

## தசதானம்

இத்தானம் அந்தியேட்டியில் செய்யப்படும் தானமாக வழக்கத்தில் வந்துள்ளது. ஆனால் இத்தாணத்தை ஒருவர் உயிருடன் உள்ளபொழுது கொடுப்பது மிகச்சிறந்ததாகும். தசதானம் வருமாறு பசு, பூமி, எள்ளு, காசு, நெய், வஸ்திரம், நெல்லு, வெல்லம், வெள்ளி, உப்பு இதிற் சிலவற்றை இரணிய தானமாகக் கொடுக்கலாம்.

## ஆசௌசம்வரின் செய்யும் விதி

பிறப்பு இறப்பு ஆசௌத்திலே சிரார்த்தம் வந்தால் ஆசௌனம் நீங்கும். அதே தினத்தில் சிரார்த்தம் செய்தல் வேண்டும். சிரார்த்தம் தொடங்கிய பின்னர் ஆசௌசம் வந்தால், அச்சிரார்த்தம் முடியும் வரை அது கர்த்தாவைப் பற்றாது.

## சைவருக்கு உரிய ஆசௌசம்

சிவதீட்சை உடையவருக்கு சைவர் என்ற பெயர் உண்டு. சிவதீட்சையுடைய பிராமணரல்லாத ஏனைய மூன்று வருணத்தார் விபூதி, உத்திராக்கம் அணிந்து சிவபூசையுடன் புலால் முதலியவை உண்ணாதவராயும் இருப்பின் அவர்களுக்கு ஆசௌசம் பதினைந்து நாட்களாகும்.

## அபரக்கிரிகை பற்றிய பொது விடயங்கள்

புண்ணிய தீர்த்தமாடும் காலத்தில் பிண்டதானம், தர்ப்பணம் செய்தால் பிதிர்களின் ஆசி கிடைக்கும். தானங்களுக்கு பச்சை அரிசி கொடுப்பது நன்று (பிராமணர்கள் புழுங்கள் அரிசி சாப்பாட்டுக்குப் பயன்படுத்தக்கூடாது என்ற வழமையும் உண்டு) புரோகிதர் அல்லது ஆசாரியர் ஒரு நாளைக்கு ஒரு தானம் தான் பெற வேண்டும். இவர்கள் ஒரு சிரார்த்தம் தான் செய்யவேண்டும். அபரக்கிரியைகள் செய்யும்பொழுது ஆசாரியர் கர்த்தா ஆகிய இருவரும் இடப்பக்கமாக பூணூல் அணியவேண்டும். பவித்திரம் காட்டுதல் வேண்டும். கர்தா கௌபீனம் தரித்து இரண்டு வஸ்திரம் தரித்திருக்க வேண்டும். தென்புலத்தாருக்கு செய்யும் கிரியைகள் யாவும் தெற்கும் மேற்கும் நோக்கியபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவேண்டும். மரணக்கிரிகையில் ஆசாரியரோ அல்லது கர்த்தாவோ உருத்திராட்ச மாலை அணியக்கூடாது.

முக்தித்தலம் ஏழினில் முதலாவதாகிய காசித்தலம் சென்று அங்கு அபரக்கிரியைகள் அதாவது அந்தியேட்டி முதலியவற்றை உயிருடன் இருக்கும் பொழுது பின்னர் தங்களுக்கு மரணத்தின் பின் கிரியை எதுவும் செய்யத்தேவையில்லை என்று நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். காசியாத்திரை சென்று வந்தவர்கள் சிலர் தங்கட்கு மரணத்தின்பின் கிரியை எதுவும் செய்யவேண்டா மென்று முன்னமே கூறியதால்அவர்களுக்கு உறவினர்கள் கிரியைகள் செய்யாது விட்ட சில சம்பவங்களையும் நாம் கேள்விப்பட்டுள்ளோம்.

இவை முற்றிலும் பிழையான கருத்தாகும். அப்படி ஒருமுறை நாம் எந்த நூலிலும் இருப்பதாக அறியவில்லை. ஆனால் புண்ணிய நதிகளில் தீர்த்தமாடி பிண்டதானம் , தர்ப்பணம் செய்தால் பிதிர்களுக்கு திருப்தி உண்டாகும் என நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

வடஇந்திய முத்தித்தலங்களில் ஒன்றாகிய காயாவில் பிதிர்களுக்கு பிண்டம் போடுவது வழக்கம். அங்கு மூன்று இடங்களிற் பிண்டம் போடுவார்கள். அங்குள்ள புரோகிதர்கள் இனிமேல் நீங்கள் உங்கள் பெற்றோருக்குப் பிண்டம் போடத் தேவையில்லை என்று கூறுவது உண்டு. ஆனால் இதுவும் நூலாதாரம் அற்றதே.

தாய் தகப்பன் இறந்த ஒருவருடத்திற்குள் தலயாத்திரை செய்தல் கூடாது. சுபகாரியங்களும் செய்தல் கூடாது. இதிலுள்ள சகலகிரியைகளையும் செய்ய இயலாதவர்கள் தன் உள்ளத்தை ஒரு நிலைப்படுத்தி ஆத்மசாந்தியைவேண்டி இறைவனைத் தியானம் செய்தல் வேண்டும்.

**இக்கட்டுரை அபரக்கிரியாவிதி, சோமசம்பு, பத்ததி, சைவபூஷணம் ஆகிய நூல்களிலிருந்தும் சைவக்கிரியைகள் பற்றிவெளிவந்த பிறநூல்களிலிருந்தும் தொகுத்து எழுதப்பட்டது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

என் கணவரின் செய்தி அறிந்து உடன் துணையாக இருந்து சகல காரியங்களையும் நிறைவாக செய்து என் மனதை வென்ற அயலவர்களுக்கும், உறவினர்களுக்கும், அவரின் அலுவலக நண்பர்களுக்கும் வெளிநாட்டில் இருந்து உதவிகள் புரிந்த உறவினர்களுக்கும், 'சடங்கு' நினைவிதழை தொகுத்து கொடுத்த தம்பி 'திருமலை சுந்தா' அவர்களுக்கும், அச்சுப்படுத்திய ரெயின்போ நிறுவனத்தினருக்கும் எனது கரம்குவித்த நன்றிகள்.

என் அன்பு கணவரின்

இன்றைய நினைவு நாளில் எங்கள் நிகழ்வில் கலந்து சிறப்பித்த உங்களுக்கும் எனது இதயபூர்வமான அன்பு நன்றிகள்

திருமதி.
இராசம்மா தர்மராஜா
(அன்னம்)

26/1, சமாது ஒழுங்கை
திருகோணமலை
21.01.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரப்பாணர் ரு

**வ**

## அமரர் சின்ன

**இராமலிங்கம் சுப்பையா**
\+
**சின்னத்தங்கம்**
↓
**பிள்ளைகள்**

- **அமரர் தம்பிராசா**
- அமரர் நடராசா
- அமரர் செல்லம்மா
- தங்கம்மா

**இராமலிங்கம் சின்னப்பா**
\+
**இராசம்மா**
↓
**பிள்ளைகள்**

- **தர்மராசா + இராசம்மா**
- துரைராசா + இராசலட்சுமி
- புஸ்பராசா + சித்ராதேவி
- துரைராசா மகன் தர்ஷன் (கண்ணன்)

**சின்னப்பா தர்மராசா**
\+
**மனைவி இராசம்மா**

**இராசம்மாவின் சகோதரம்**

- தையல் நாயகி காசிப்பிள்ளை
- அமரர் சின்னத்துரை
- சங்கரப்பிள்ளை
- அமரர் கனகரத்தினம்

**தர்மராசாவின் தாய்**
**இராசம்மாவின் சகோதரங்கள்**

- தங்கமுத்து

↓
பிள்ளைகள்

- அமரர் கனகேஸ்வரி
- அமரர் மகேஸ்வரி
- அமரர் ஜெயரத்தினம்
- யோகேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலியார் வம்சம்

ாவழி

## ப்பா தர்மராசா

ராமலிங்கம் சின்னத்துறை
+
சோதிப்பிள்ளை

**பிள்ளைகள்**

அமரர் தேவராசா
இந்திராதேவி
சுதந்திராதேவி

இராமலிங்கம் இலட்சுமிப்பிள்ளை
+
திருநாவுக்கரசர்

**பிள்ளைகள்**

- சிவசுந்தரம்
- சிவராசா
- சிவானந்தம்
- கலாதேவி

**பேறாமக்கள்**

- இரவீந்திரன்
- ஜெயகிரி
- கணேஷ்
- மோகனமூர்த்தி
- அமரர் சந்திரன்
- தயா
- வதனி

**மருமக்கள்**

இந்திராதேவி + சிவராசா

- அமரர் சிவபுவி
- ரகுதாஸ்
- சுஜாரஜி
- ஜீவதாஸ்

சுதந்திராதேவி
+
துரைசிங்கம்

- மிறோஜன்
- திலோஜன்
- சஜந்தன்
- சுஜித்தா
- கம்சிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org